# இறைதூதன்

## Messenger of God

UNIVERSITY OF JAFFNA LIBRARY
09 DEC 1999
PERIODICALS DIVISION

### இம்மாதச் செய்தி

**மகிழ்ச்சியான வாழ்வுக்கு
உணவு, வேலை, உறக்கம்
எண்ணங்கள், செயலகள்
கேள்விகள் என்பனவற்றில்
ஒரு அளவோடு கட்டுப்
பாட்டைக் கடைப் பிடிப்பது
மிகவும் அவசியமாகும்.**

செய்திக் கட்டுரை

(3ம் பக்கம்)

சர்வமதப் பத்திரிகை
ஆவணி 1998
இதழ் 5

மாதம் ஒரு முரசு
விலை ரூபா 10/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கருத்து

## நல்வழிப்படுத்தி நல்ல மனிதனாய்

அன்பான இறைதூதனே!

அன்புணர்வும், பக்தியுணர்வும் காட்டி எங்களை நல்வழிப் படுத்தி நல்ல மனிதனாய் வாழ வைக்கும் நீ பல்லாண்டு காலம் வாழ வேண்டும். எங்கள் மனதை அன்பு பக்தி வழிதிருப்பிடவேண்டும் அன்புச்செய்தி கொண்டு வரும் உனது அன்புருவான இதயத்தை எல்லோரும் வாசிக்க வேண்டும் என்னைப் போல நலம்பெற வேண்டும் ஒவ்வொரு மாதமும் அன்புமலர் போல எங்களுக்கு இனிய நறுமணம் வீசிடவேண்டும்.

ந. லதா
தாளையடி

## எல்லோர் உள்ளங்களையும் அறிந்த பாபா

நானும் மனைவியும் 1996ம் ஆண்டு வைட்பீல்ட் பிருந்தாவனத்திற்குச் சென்றிருந்தோம். பாபா எனக்கு அண்மையில் நின்ற படம் பங்குனி மாதம் 8ம திகதி வெள்ளிக்கிழமை கிடைக்கப் பெற்றோம். நாம் அப்படத்துடன் இருக்கும் பொழுது மனைவியுடன் இருந்த ஆஜன்டைனாவைச் சேர்ந்த பெண்மணிகள் மகிழ்ச்சி தெரிவித்து இதன் விபரங்களையும் கூறினார்கள்.

அவர்கள் எம்மை விட்டுச் சென்றதும் நான் மனைவியை நோக்கி 94ம் ஆண்டு பாபா எனக்கு அருளாசி வழங்கிய படம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலைய மான்மியத்தில் இணைத்து அதுவும் உலக நாடுகளுக்கும் சென்றுள்ளது. இப்படி இருக்கையில் மீண்டும் எனக்குக் கிடைத்ததைவிட உங்களுக்கு கிடைத்திருக்கலாம அல்லவா என்றேன்.

நீங்கள் குடும்பத் தலைவன் உங்களுக்குக் கிடைத்தால் அது எங்களுக்கு கிடைத்ததற்குச்சரி என மனைவி கூறினார் நான் அதை ஏற்றுக் கொள்ள வில்லை பாருங்கள். அடுத்த நாள் 9ம் திகதி சனிக்கிழமை காலை சுவாமி மனைவிக்கு முன்னால் நின்றுள்ளார். சுவாமி நிற்பதும் மனைவி கைகூப்பி வணங்குவதையும் பாபா போட்டோ கிறாபர் மூலம் பெற்றுக் கொண்டோம்.

கண் கண்ட நடமாடும் தெய்வம் கருணை கடல் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா தான் எமக்கு எல்லாமே.

சுவாமி நாதன் தர்மசீலன்
கொழும்பு

# தூதுவன் கருத்து

## ஆரோக்கியமாக வாழ

சாய் ராம்,

இன்று விஞ்ஞானத்தில் முன்னேற்றம் கண்டுள்ள வேளையிலும் உலகத்தில் மக்கள் நோய்களால அவதிப்படுவது அதிகமாக காணப்படுகிறது. தற்போது 40 வயதைத் தாண்டியதும அனேக மக்கள் இரத்த அழுத்தம், இருதய வியாதி, சக்கரை வியாதி, அஸ்மா போன்ற நோய்களால் அவதியுறுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

பண்டைக்காலத்தில் இவ் விதமாக மக்கள் நோய்களால் அவதிப்பட்டது மிகமிகக் குறைவு மகாபாரதம் நடந்தபோது பீஷ்மருக்கு வயது 125 கிருஷ்ணரது வயது 86 அர்ஜுனனுக்கு வயது 84 இந்த வயதிலே அவர்கள மிக்க உடல் ஆரோக்கியத்துடன போர் புரியக் கூடிய நிலையில் இருந்திருக்கிறார்கள்.

எனவே இக்காலத்தில் மக்கள் மிகக்குறுகிய வயதுக்குள் நோய்களுக்கு ஆளாகி தமது உடல் ஆரோக்கியத்தை இழந்து அவதிப்படுவதற்கு என்ன காரணம்.

இதற்கு காரணம் எமது வாழ்க்கை முறையே எதிலும் சட்டுப்பாடில்லாத வாழ்க்கை முறையே இதற்கு காரணம்

நாம் புலன்களுக்கு அடிமையாகி எமது உடல் நலத்துக்கு கேடு விளைவிக்க கூடிய முறையில் எமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டது தான். எமது ஆரோக்கியங்கெட ஏதுவாக அமைகிறது.

இறைச்சி மற்றும் மதுவகை சேர்த்த உணவு வகைகள் கட்டுப்படுத்த முடியாத தீவிர உணர்ச்சிகள், தவறான வழியில் சேர்க்கும் பணத்தில் வாழ்க்கை நடத்துதல், நியாயமற்ற முறையில் சத்தியத்தை மறந்து வாழுதல் என்பனவே உடல் நலத்துக்கு தீங்கு விளைவிக்கிறது.

எமது உணவு எப்படியோ அப்படியே எமது மனம்! மனம் எப்படியோ அப்படியே எமது எண்ணங்கள். எண்ணங்கள் எப்படியோ அப்படியே எமது நடத்தை. நடத்தை எப்படியோ அப்படியே எமது உடல் நலம்.

ஒவ்வொரு மனிதனும் ஆரோக்கியம் அவனிலேயே தங்கியுள்ளது நமது ஆரோக்கியத்தைக் காப்பது எம் பொறுப்பிலும் எமது வாழ்க்கை முறையிலும தங்கியுள்ளது.

எமது ஆரோக்கியத்தைக் காப்பாற்ற மருந்துகளோ அன்றி டாக்டர்களோ பயன்பட மாட்டாது அவர்கள் ஏதோ சிகிச்சை செய்பவர்களே தவிர எமது முன் ஜாக்கிரதையான வாழ்க்கை முறையாலேயே எம்மை நோயிலிருந்து பாதுகாக்க முடியும்

எனவே நாம் எமது ஆரோக்கியத்தைப் பேணக்கூடிய வகையில் எமது வாழ்க்கை முறையையும் எமது உணவு வகைகளையும் அமைத்து கட்டுப்பாடான வாழ்க்கை வாழ்ந்து ஆரோக்கியமாக வாழ்வோமாக

ஜெய் சாய் ராம்

# யான் பெற்ற இன்பம் பெறுக.......

## அனைத்தும் நான் அறிவேன்

—சாயி ஞானி—

ஒரு முறை ஒரு பேராசிரியர் தரிசனத்துக்கு குளிக்காமல் வந்து விட்டார் அவர் புட்டபர்பத்தியில் பகவான் பாபாவின் கல்லூரியில் போதிக்கும் பேராசிரியர். தரிசனத்துக்கு குளிக்காமல் வந்து அமர்ந்து விட்டார்.

ஸ்வாமி வருகிறார், பேராசிரியர் முன் வந்து நின்று கொண்டு 'சில பேர் குளிக்காமல் தரிசனத்துக்கு வந்திருக்கிறார்கள்'' எனக் கூறுகிறார்.

பேராசிரியருக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது. தரிசனம் முடிந்த பின் காலை உணவுக்காகதன் அறைக்குப் போனார். குளியலறைக்கு சென்று குளிப்பதும் வருவதுமாக மூன்று முறை ஸ்நானம் செய்து விட்டு காலை பஜனைக்காக மறுபடியும் வந்து அமர்ந்தார். பாபா திரும்பவும் அவர் அருகில் வந்து நின்று,

''நான் ஒரு முறைதானே குளிக்கச் சொன்னேன் ஏன் மூன்று முறை குளித்தாய்'' என்று கேட்டார். பேராசிரியர் அதிர்ச்சியுற்றார் இங்கு நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும் கட்டாயம் குளிக்கத்தான் வேண்டும் என்பதற்காக அவர் கூறவில்லை. நீங்கள் செய்யும் அனைத்தையும் நான் அறிவேன் என்பதை பக்தாகளுக்கு விளக்கவே இப்படி ஸ்வாமிநடந்து கொள்வார்

நான் கோடைக் கானலில் இருந்தபோது எங்களுடன் பத்துப் பேர் இருந்தார்கள். சரியான குளிர் தண்ணீரோ 'ஐஸ்' மாதிரி ஒவ்வொருவருக்கும் இருந்த வீட்டுக்காரர் ஒவ்வொரு பானை தண்ணீர் சுட வைத்துக் கொடுப்பார்கள் நான் முந்தி. நீ முந்தி என்று எல்லோரும் போய் சுடு தண்ணீர் வாங்கி குளித்தார்கள். எனக்கு அப்படி சுடு தண்ணீர் வாங்கி குளித்து விட்டு போவதென்றால். தரிசனத்துக்கு பிந்தித்தான் போக வேண்டும். நான் மனதில் பகவானிடம்,

பகவானே! என்னை மன்னியுங்கள் நான் குளிக்காமல் வருவதற்கு என்னை மன்னியுங்கள் ஸ்வாமி எனப்பல முறை வேண்டிக் கொண்டேன். அன்று குளிக்கரமல் போனேன் ஆனால் பாத நமஸ்காரம் கிடைத்தது. எனவே பகவானின் செயல்கள் யாவும் நாம் அறிய இயலாது அது அவருக்குத் தான் தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை நோய்களிலிருந்து காப்பாற்றி மகிழ்ச்சியுடன் வாழ கட்டுப்பாடு வேண்டும்

**பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா**

## ஆரோக்கிய வாழ்வு

கட்டுப்பாடு

உவிணலும் வேலையிலும் உறக்கத்திலும் ஓர் அளவு கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியமானது. பகவான் புத்தரும் தம் சீடர்களுக்கு இந்தக் கட்டுப்பாட்டைத் தான் போதித்தார். உண்மையில் எதிலும் கட்டுப்பாட்டுடன் இருப்பது தான் மகிழ்ச்சிக்கு வழிகாட்டும் ராஜ வீதி.

உணவையும் நீரையும் பழங்களையும் எண்ணங்களையும் எல்லாம் ஒரு மிதமான கட்டுப்பாட்டுக்குள் மனிதனால் அடக்கி வைத்திருக்க முடியும். என்றால் அவனுக்கு மகிழ்ச்சி என்பது நிச்சயம் கிடைக்கும் வாழ்க்கை முழுவதுமே கட்டுப்பாட்டுக்குள் இருப்பது தான் நல்லது. இங்க வாழ்க்கையில் நாம் உண்ணும் உணவும் அளவோடு தான் உண்ண வேண்டும். Be Always Moderate Never go to excesses.

## உடல் என்னும் இயந்திரம்

மனித வாழ்க்கை மிகவும் மதிப்பு மிக்கது உடல் பல விசித்திரங்களைக் கொண்டது. இந்த உடல் என்னும் இயந்திரத்தில் இதயம் என்பது விசித்திரமானது இதன் ரகசியத்தை இது வரைக்கும் எந்த விஞ்ஞானியோ அன்றி எஞ்சினியராலோ கண்டு பிடிக்க முடியவில்லை.

இதயம் ஒரு நிமிடத்துக்கு 70 - 75 முறை துடிக்கிறது. ஒவ்வொரு முறை துடிக்கும் போதும் ரத்தம் 12,000 மைல் தூரம் பயணம் செய்கிறது. இதயத்திற்குச் செல்லும் இரத்தம் அங்கிருந்து நுரையீரலுக்குச் சென்று அங்கு பிராணவாயுவின் சேர்க்கையால் பரிசுத்தப் படுத்துப் பட்டு அங்கிருந்து உடலின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படுகிறது. இரத்தக் குழாய்கள் இந்த ரத்தத்தை 12,000 மைல் தூரம் எடுத்துச்செல்கின்றன. இத்தகைய ஆச்சரியமான ரகசியத்தை இதுவரை எவருமே விரிவாகக் கண்டு பிடிக்கவில்லை. இதெல்லாம் கடவுளால் உருவாக்கப் பட்டவை அவரது அருள். அதுமட்டுமல்ல அவரது சங்கல்பம.

## இதய நோய் பற்றி

ஒவ்வொரு மனிதனும் தன் உணவுப்பழக்கத்தையும் மற்ற பழக்கங்களையும் Moderate ஆக ஒரு கட்டுக்குள் வைத்துக் கொண்டு இதய நோய்க்கு ஆளாகாமல் கவனித்துக் கொள்ள வேண்டியது அவனுடைய முதல் கடமை வந்த பின் தீர்ப்பது எனபதைவிட வருமுன் காப்பது தாசின் சிறந்தது உங்களுடைய உணவுப்பழக்கங்கள் கட்டுப் படுத்தப் பட்டு ஒழுங்கானவைகளாக இருந்தால் இதய நோய் என்பது அருகில் கூட வராது.

பல ஆராய்ச்சிகள் சொல்லும் உண்மைகள் என்னவென்றால் புலால் உண்பவருக்கும் மது அருந்துவோருக்கும் இதய நோய்கள் வரும் சாத்தியக்கூறுகள் சாதாரண ''வெஜிரேரியன்'' களை விட அதிகம் என்பது தான். தாவர உணவு உண்பவர்களின் உணவில் சரியான அளவு C வைட்டமினும், E வைட்டமினும் இருக்க வேண்டும். காரட் போன்ற காய்கறிகளில் இவை கிடைக்க வாய்ப்பு உண்டு. இந்த விட்டமின்கள் இதய நோய் வராமல் பெருமளவில் பாதுகாக்கின்றன மனித உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள எல்லா முயற்சிகளும் எடுக்கப்படவேண்டும. ஏன்னெனில் உடல் நலம் தான் செல்வம், என்ன தான் செல்வம் இருந்தாலும் உடல் நலம் குன்றினால அனுபவிக்க முடியாது. உடல் ஆரோக்கியமாக இருந்தால் மனித மனமும் ஆரோக்கியமாக நலமாக இருக்கும்.

## இதய நோய்க்கு காரணங்கள்

இதய நோய்க்கு உணவு தவிர நம் பழக்கங்களும் கூட காரணமாக அமைகின்றன. சில வேளைகளில் நமது அலட்சியம் கூட இதற்கு காரணமாகிறது.

## எப்போதும் Tension:-

மனிதனுக்கு எப்போது பார்த்தாலும் Tension தான் எதற்கு Tension? இவையெல்லாம் வந்து போகக் கூடிய நகரும் மேகங்கள். இதற்காக ஏன் கவலைப்பட வேண்டும்.

இதய நோய்க்கு காரணம் அவசரம் கலக்கம், உணவு (Hurry, Worry Curry மூன்றும்தான். நிரந்தரமான Worry, எப்போதும் Hurry. நமது உணவின் Curry (கொழுப்பு உணவு) இவைதான் இதய நோய்க்கு காரணம். இந்த மூன்றையும் கட்டுப்படுத்திவிட்டால் இதய நோயக்கு இடமேயில்லை. ஆரம்பத்திலிருந்தே உன்னை சரிவரப் பழக்கிக் கொள்ளவேண்டும்.

மனிதனுக்கு கஷ்டங்கள் வரத்தான் செய்யும். வரும்போகும். எதுவுமே இவ்வுலகில் நிரந்தரமானது இல்லை. அதனால் Worry செய்யக்கூடாது. கவலையின் வடிவம் யாது? அது மனம் உருவாக்கிய பயம் இந்த சத்தியத்தைப் புரிந்து கொண்டால் கவலைக்கு இங்கு இடமிருக்காது. வயது ஏற ஏற உன் கவலைப் படும் போக்கு அதிகரிக்கிறது அதனால் நீயே உன்நோய்களை வருந்தி வருந்தி அழைக்கிறாய் அதனால் கவலைக்கு இடம் தரக்கூடாது.

## அவசரம் (Hurry)

அதற்கு அடுத்தது. அவசரம் அதனால் தான் சாந்தி, சாந்தி, சாந்தி என்று சொல்கிறார்கள். எதற்காக மும்முறை சாந்தி சொல்கிறார்கள் ஆதி பௌதிகம் சாந்தி ஆதி தெய்விகம் சாந்தி, ஆதியாத்மிகம் சாந்தி, சரீரம், மனம, ஆன்மீகம் என்ற மூன்று நிலைகளிலும் மனிதனுக்கு அமைதி வேண்டுமெனக் குறிப்பிடுவதற்காகவே மும்முறை சாந்தி என உரைக்கிறார்கள்.

## தூய்மையான உணவு

இந்நாளைய நாகரிகத்தில் மனிதன் எல்லா வகையிலும் தறிகெட்டுப் போகிறான், அதன் மூலம் தன் உடல் நலத்துக்கும் நிம்மதியான வாழ்க்கைக்கும் அவனே தீங்கு விளைவித்துக் கொள்கிறான் மனிதன் உண்ணும் உணவு சரியானதாக தூயதாக முழுமையானதாக இருக்க வேண்டும். ஆனால் தற்போது மக்கள் எதெல்லாம் கிடைக்கின்றதோ எங்கிருந்தெல்லாம். கிடைக்கிறதோ அதையெல்லாம் உண்டு. விட்டு தங்கள் ஆரோக்கியத்தை பாழடித்து, கொள்கிறார்கள். உடல்நலப்பாதுகாப்பில் உணவு ஒரு பெரிய பொறுப்பை வகிக்கிறது நாம் உண்ணும் உணவில் கொழுப்புச்சத்து அதிகமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதிகமான கொழுப்புசத்து உடல் நலத்தை மட்டுமன்றி மன நலத்தையும் பாதிக்கிறது இதன் மூலம் மனிதனின் உண்மையான நல்லகுணங்கள் வெளிப்பட மறுக்கின்றன இறைச்சியும் ஆல்கஹால் கலந்த குடியும் மனிதனின் உடல் ஆரோக்கியத்தை பெருமளவில் பாதித்து பல நோய்கள் வரக்காரணமாக அமைகின்றன.

## இயற்கை உணவு

பறவைகளும் மிருகங்களும் மனிதனைப் போல இதய நோயாலோ அஜீரணத்தலோ வருந்துவதில்லை. காரணம் அவை உண்ணும் இயற்கை உணவே, மனிதனைப் போல வறுத்த பொரித்த எல்லாவித உணவையும் நாவின் ருசிக்கு அடிமையாகி அவை உண்பதில்லை மிருகங்களும் பறவைகளும் இயற்கையாக வாழ்கிறன. ஆனால் செயற்கை வாழ்க்கை முறைகள் மனிதனின் வாழ்க்கையை அவன் உடல்நலத்தை மிகவும் பாதிக்கின்றன.

## உணவு உண்ணும் சூழல்

உணவு உண்ணும்போது மனதை அமைதியாக நிர்மலமாக வைத்துக் கொள்ள வேண்டும். உணவு உண்ணும் போது பயங்கரமான விஷயங்களை பேசக்கூடாது கலக்கத்தை தரக்கூடிய விஷயங்களை விவாதிக்க கூடாது உணவு உண்ணும் போது வாதப் பிரதி வாதங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

உணவு உண்ணும் போது நிசப்தமாக உண்ணவேண்டும். ஏனெனில் பேசும் போது ஏற்படும் ஒலி அலைகள் கூட இதயத்துள் நுழைந்து உடல் நலம் மனநலம் குன்ற வாய்ப்புண்டு.

(11ம் பக்கம் பார்க்க)

ஒருவருடைய பக்குவம் புலனடக்கம் என்னும் அளவுகோலால் அளக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிம்பிராச மன்னன் யாகசாலை சென்று பலியிடுதலைத் தடுத்த பகவான் புத்தர்

அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் வெளியே சென்ற புத்தர் சத்தியத்தைத் தேடி பல இடங்களுக்கு அலைந்தார்.

ஒரு நாள் அவர் சென்று கொண்டிருக்கும் காட்டுப் பாதை வழியே பெரியதொரு ஆட்டு மந்தை செல்வதைக் கண்டார் உணவு தண்ணீர் இன்றி மெலிந்து நடக்கவும் முடியாமல் தள்ளாடும் ஆடுகளைக் கண்டு மனமிரங்கினார்.

கண்ணில் கண்ட புல்லை தின்பதற்கோ குட்டையில் தேங்கிய நீரைப் பருகுவதற்கோ இடையன் ஆடுகளை அனுமதிக்கவில்லை. அவசரமாக மந்தைகளைத் துரத்திக் கொண்டு சென்றான். காடுகள் மலைகள் எல்லாம் தாண்டிச் சென்று கொண்டு இருப்பதைப் பார்த்தார். புத்தர். ஆடுகள் என்றாலும் இப்படி ஒரு அநியாயத்தைச் செய்வதா என மனங்கசிந்துருகினார்.

இந்த ஆட்டு மந்தையின் மத்தியில் ஒரு குட்டி ஆடு காலில் காயம் பட்டு நடக்க முடியாமல் நடந்து செல்வதைக் கண்டார். ஆட்டுக் குட்டியின் நிலைகண்டு தாய் ஆடு தவித்தது. தாய் ஆட்டின் தவிப்பைக்கண்டு மனம் இரங்கிய புத்த பகவான் நொண்டி ஆட்டுக்குட்டியை தன் இருகரங்களாலும் அள்ளி எடுத்து தன் தோள் மேல் சுமந்து சென்றார். செல்லும் போது,

> **எல்லா உயிர்களின் உள்ளத்து உறையும் ஆத்மா நானே, உயிர்களின் ஆதியும், இடையும, இறுதியும் நானே.**
>
> **– பகவத்கீதை –**

''தாயே நீ துன்பப்பட வேண்டாம் உன் பிள்ளையை எங்கு சேர்த்து விட வேண்டுமம்மா அங்கே சேர்த்து விடுகிறேன் ஏழைப் பிராணிகளின் துன்பம் களைந்து இன்பம் அளிப்பதுபோல இந்த உலகில் வேறு மாதவம் உண்டோ? மீளாத் துயரில் உயிர்களெல்லாம வாடும் போது குகை தேடி தவம் செய்வது பாவம் அல்லவா? இவ்வாறு தாய் ஆட்டுக்கு ஆறுதல் சொல்லியபடி செல்கிறார் புத்த பகவான் திடீரென யமன் விட்ட தூதுவர் போல ஆடுகளைக் குன்றில் இருந்து துரத்தி வரும் இடையனைக் கண்டார். மனம் பொறுக்க முடியாமல்,

''மாலைப் பொழுது இன்னும் ஆகவில்லை மண்டை பிளந்து வெடிக்குதையோ இந்த ஆடுகளை இந்தக் கொடும் வெயிலில் எங்கு துரத்திக் கொண்டு போகிறாய்?'' என இடையனிடம் கேட்டார்.

''ஐயா எம்மையாளும் அரசன் பிம்பிராச மன்னனுடைய யாகசாலைக்கு செம்மறி ஆடு நூறும் வெள்ளாடு நூறும் துரத்திச் செல்கிறேன், இன்று இரவுடன் யாகம் முடிவுறும், அத்தருணத்தில் இத்தனை ஆடுகளும் பலியிடப்படும் நின்று சொல்ல எனக்கு நேரமில்லை இன்னும் நீண்ட தூரம் போகவேண்டி இருக்கிறது'' எனக்கூறியபடி ஆட்டு மந்தைகளை வேகமாகத் துரத்தியபடி சென்றான். மனம் கசிந்துருகிய புத்தர்,

''இந்த யாகத்திற்கு நானும் வருகிறேன்.''

எனத்துள்ளும் குட்டி ஆட்டைச் சுமந்தபடி தாயாடு தொடரச் செல்கிறார்.

அந்திசாயும் வேளை முல்லையும் மல்லிகையும் மலர்ந்து மணம் பரப்பும் வேளை வானளாவிய மதிலில் கொடிகள் ஆடும் பிம்பிராச மன்னனுடைய மாநகர திருவாயிலை வந்தடைகிறார் கருணை கடலான புத்தபகவான்

குட்டி ஆட்டினை தோளில் சுமந்தபடி ஆட்டு மந்தைக் கூட்டத்துடன் வரும் புத்தரின் ஜோதியான வதனத்தைக்கண்ட மக்கள் எல்லாம் அதிசயித்து, யார் இவர் என வினவ அரச வாயிலில் காத்து நிற்கும் சேவகரும் ஒதுங்கி வழிவிட்டு கொடுத்தனர்.

மண்ணைச்சுமந்து வரும் குயவனும் இவர் ஒரு மாமுனியே என வணங்கி நின்றனர். பள்ளிச் சிறுவர்களும் உபாத்தியாயர்களும் ஆசையுடன் அவர் பக்கம் ஓடி வந்தனர், எவரும் தம்மை மறந்து நின்றனர்.

''கண்ணில் கருணை பொங்குகிறது. கம்பீரமாகத் தோற்றமளிக்கிறார். ஆடுகளுடன் வருகிறபடியால் இவரை இடையன் என்றும் சொல்ல முடியாது நிச்சயமாக இவர் இராஜ குலத்தில் பிறந்தவர் தான்'' யாகத்துக்கான பிராணிகளை கொண்டு வரும் இவர் மிகவும் பக்தியுடையவராக இருப்பார், விண்ணுலகத்திற்கு தேவராஜன், உயர் மாதவச்செல்வன் இவர் என்று ஆண்களும் பெண்களும் வியர்ந்து போற்றி நிற்க, புத்தபகவான் பிம்பிராச மன்னனுடைய யாகசாலையை வந்தடைந்தார்

## யாக சாலையில் புத்தர் கண்ட காட்சி

யாகசாலையின் நடுவில் அரசன் பிம்பிராசன் வந்து நின்றார், யாகசாலையில் ஒரு பக்கம் அந்தணர்கள் கூடி இருந்து மந்திரங்கள் ஓதி. சோமபானங்கள், நெய் ஊற்றி யாகத்தீயினை வானளவு உயர வளர்த்தனர், யாகப்புகை வானளாவிப் பரவிச் சென்றது. வெள்ளாடு ஒன்று பலியிடுவதற்காக பலிப்பீடத்தில் கிடத்தியிருந்தது நீட்டிய ஆட்டின் கழுத்தை அறுப்பதற்கு தீட்டிய கத்தியுடன் ஒரு தீஷிதர் முன் வந்து நின்றார் ஏற்கனவே பலியிடப்பட்ட ஆடுகளின் இரத்தம் ஆறாக ஓடி பரந்து நின்றது.

''யாகத்து இறைவனே ..! புவியாளும் எங்கள் அரசன் பிம்பிராசனால் செய்யப் படும் இந்த யாகத்தை முடிவுக்கு கொண்டுவர உமக்கிடும் பெரும்பலி இதுவாகும் ஓடும் உதிரத்தைக் கண்டு களிப்பீர்'' என்று சொல்லி தீஷிதரும் வாளை ஓங்குகையிலே குறுக்கே பாய்ந்த புத்தரும்

''அண்ணலே ஆட்டினைக் கொல்லாது அருள்புரியும் ஞானமுள்ள எவரும் இந்தக்கொடும செயலைச்செய்ய மாட்டார்'' என்று கூறியபடி ஆட்டின் கால் கட்டுகளை எல்லாம் அவிழ்த்து விட்டார் வாயில் கட்டிய கட்டையும் அவிழ்த்து விட்டார் நின்றவர் எல்லோரும் நடுநடுங்கி அஞ்சி நிற்க புத்தர் அறிவுரை கூற எழுந்தார்

> ### அதர்மத்தை எதிர்த்து நின்றால்
>
> கலியுகத்தில் வரும் அதர்மப் பிரவாகத்தை ஒருவர் எதிர்த்து நின்றால் மற்ற யுகத்தில் கிடைப்பதைவிட கோடி மடங்கு பயன் கிடைக்கும் எதிர்ப்பு உண்டாகும் சமயத்தில் தடுத்து நின்றால் தான் பெருமை. உலகம் பரிகாசம் செய்வதைப் பொருட்படுததாமல் தர்மானுஷ்டானங்களைக் காப்பாற்றி சித்தி சுத்த அடைவதே பெருமை.
>
> –காஞ்சிப் பெரியவர்–

ஐயா! வாழும் உயிர்களைப் பறிப்பது மண்ணில் எல்லோருக்கும் எளிதாகும் ஆனால் இறந்த உடலை எழுப்புவதற்கு அரசனால் கூட முடியாது உயிர்களைப் பேணிக்காத்து, நேர்மையான உள்ளத்துடன் உன் நாட்டை ஆண்டால் காலத்திற்குக்காலம் மழை பொழியும், வயல்களில் பயிர்கள் நன்கு விளையும் கருணையுடைய இதயம் படைத்தவரே கண்ணியமான வாழ்வை உடையவர் இந்த உண்மையை அறியாதவர் வாட்டும் உலகில் வருந்திடுவார் இப்படியானவர் மூடர் ஐயா! ஆட்டின் கழுத்தினை அறுத்து ஆக்கிய ஆவியுணவை கருணைக்கடலான இறைவன் கைகளில் ஏந்திப்புசிப்பாரோ சொல்லுமையா? உம் மைந்தர்களில் ஊமை மகனை ஒரு மகனை வாளால் அறுத்து கறி சமைத்துத்தந்தால எந்தத் தந்தையாவது உண்டு களிப்பாரா? காடு மலை எல்லாம் மேய்ந்து விட்டு உம் மக்களுக்கு தன குட்டி வருந்த பாலைத் தருவது தீயசெயல என்று எண்ணினீரா ஐயா? காட்டுப்புலிகளுக்கு அஞ்சி உம்மையண்டிப் பிழைக்கும் ஆடுகளைக் கொல்லுவதால் உமக்கு நன்மை வரும் என்று எண்ணுகிறீரா ஐயா? மண்ணில்வளரும் புல்லை உண்ணும் வானம் பொழியும் நீரை உண்டு வாழும் ஆடுகளுக்கு நீர் செய்யும் உதவிகள் தானென்ன? தாய் என உம்மை நம்பி வரும் உயிர்களை புனிதமான யாக சாலையின் மத்தியில் இடத்தி கிறிப்பிளப்பதனால் என்ன பேறும் பெருமையும் பெற்றீர்

(11ம் பக்கம் பார்க்க)

நல்லதையோ தீயதையோ ஒருவன் செய்தால் அதன் விளைவுகள் அவனைத் தொடரும.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயக தத்துவம்

### பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

இந்துக்களால் அனுஷ்டிக்கப்படும் விசேட தினங்களிலே விநாயக சதுர்த்தி குறிப்பிடத்தக்க முக்கிய இடத்தை வகிக்கிறது. விநாயக சதுர்த்தியிலே மக்கள் விரதம் இருந்து ஆலயத்திற்குச் சென்று பூசைகள், வழிபாடுகளில் பங்கேற்பது வழக்கம் இவ்வாறான கிரியை வழிபாடுகளுடன் மட்டும் நின்று விடாது இத்தினத்துனுடைய முக்கியத்துவம், அதனை அனுஷ்டிப்பதற்கான முறைகள், அவற்றின் உள்ளார்ந்தமான தத்துவங்கள் என்பவற்றை அறிந்திருப்பது மிகவும் முக்கியமான சமயக் கடமையாகும்.

ஒவ்வொரு மாதமும் விநாயக சதுர்த்தி வழிபாடுகள் நடைபெறினும் ஆவணி மாதத்தில வரும் சதுர்த்தி மிக விசேடமானதாகும். இத்தினம் விநாயகப் பெருமானின் பிறந்த தினமாக கருதப்படுகிறது விநாயக சதுர்த்தியின் சரியான பொருள் துர்க்குணத்தை விட்டு விலகியிருத்தலும் நற்குணத்தை நாடுதலுமேயாகும்.

## 25 8-98 விநாயக சதுர்த்தி

கணபதி நமக்கு ஆன்மீக சக்தியையும் உயர்ந்த ஞானத்தையும் அளிக்கிறார் இவை தான் சித்தி, புத்தியென வழங்கப்படுகின்றன. மனது பரிசுத்தமாக இருக்கும போதே புத்தி நன்கு செயல்படுகிறது புத்தி மலர்ச்சியடைந்து செயற்படும் போது சித்திகள் (ஆற்றல்கள்) அடையப் பெறுகின்றன.

ஆகவே மனம் பரிசுத்தமாக இருக்கும் போது தான் புத்தி சித்தி இவையிரண்டும் சிறந்து விளங்குகின்றன விநாயகர் புத்தியினையும சித்தியனையும் வசீகரிக்கின்றார் புத்தியும சித்தியும் ஷேமம், ஆனந்தம் ஆகியவற்றைத் தருகின்றன. இதனையே புராணமானது விநாயகருக்கு சித்தி, புத்தி என்ற இரு மனைவியரென்றும சேமம (இருப்பதைப்பாதுகாத்தல்) ஆனந்தம் என்ற இரு புதல்வர்கள என்றும் கூறுகின்றனர்.

தங்கம், வெள்ளி, இரும்பு எனப்பல உலோகங்கள் வைக்கப்பட்டு அவற்றினிடையே காந்தம் ஒன்று வைக்கப்பட்டால் அது இரும்புத் துண்டையே கவர்கிறது மற்றையவை எவ்வளவு மதிப்பில உயர்ந்தவை என்றாலும் அவற்றைக் கவர்வதில்லை. அவ்வாறே விநாயகரும் புத்தி சித்தி வரப்பெற்ற மனிதனையே கவர்கிறார். இதற்கு அடிப்படையாக உள்ள மனத் தூய்மையுடைய மனிதனையே விநாயகர் பிரியமுடன் கவர்ந்து கொண்டு அருள் புரிகிறார்.

### யானைத் தலையின் தத்துவம்

கணேசரின் யானைத் தலையின் தத்துவம் யாதெனில் யானை சிறந்த அறிவு படைத்தது. யானைக்கு 'மேதா சக்தி' அதிகம் மேலும் யானையின் காதுகள் பெரியதாக இருப்பதால் நுண்ணிய சப்தத்தைக் கூட அதனால் கிரகிக்க முடிகிறது இறைவன் புகழைக் கேட்பது என்கிற ஆன்மீக சாதனையின் முதல் படிக்கு காதுகள் கூர்மையாய் இருப்பது அவசியம் யானை புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒரே மாதிரி எடுத்துக் கொள்கிறது. தேவையற்றவற்றை உதறிவிடுகிறது நல்ல விஷயங்களை மௌனமாக ஏற்றுக் கொள்கிறது இவ்வாறு மனித குலத்திற்கு அத்தியவசியமான பாடங்களை விநாயகா நமக்குக் கற்றுத் தருகிறார்.

### விநாயகர் வாகனம் மூஞ்சுறு தத்துவம்

அவரது வாகனம் மூஞ்சுறு. மூஞ்சுறு இருளில் தான் சஞ்சரிக்கும் அத்துடன் மூஷிகத்திற்கு வாசனை பிடிக்கும் வாசனை பிடித்துக்கொண்டே எந்தெந்த உணவுப் பொருள் எங்கிருக்கிறது எனக் கண்டு கொள்ளும் ஆன்மீகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும் வாசனை என்பது ஆசைகளையும் குறிக்கிறது எனவே தான் அஞ்ஞானத்தையும், ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைப்பவர் என்பதை விளக்கவே அவற்றின் உருவமாக விளங்கும் மூஷிகத்தை வாகனமாகக் கொண்டு உள்ளார்.

விநாயக சதுர்த்தியிலே விசேடமான உணவுப் பண்டங்கள் கடவுளுக்கு நிவேதனமாக அளிக்கப்படுகின்றன. அப்பண்டங்கள் நீராவியில் தயாரித்தவை அல்லது எள் சம்பந்தமானவை. விநாயக சதுர்த்திப் பருவத்தில் எள் அறுவடையாகும். எள்ளானது சுவாச சம்பந்தமான நோய்களையும் கண் நோய்களையும் தீர்க்க வல்லது. நீராவியில் வெந்த பண்டங்கள் சுலபமாக சீரணிக்கக் கூடியவை ஆகும். இவ்வாறு முன்னோர்கள் ஆரோக்கியமும் ஆனந்தமும் கூடியவகையில் இறைவனை வழிபட்டார்கள்.

### விநாயகர் பூஜைக்கு

விநாயகர் பூஜைக்கு அறுகம்புல் பயன்படுத்தப்படுகிறது. அதற்குரிய காரணத்தை விளக்கப் புராணங்களிலே ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. ஒரு முறை சிவபெருமானும் பார்வதியும் கைலாயத்தில் தாயம் ஆடிக்கொண்டிருந்தார்கள். இதில் யார் வென்றது எனத்தீர்ப்புக் கூறும் பொறுப்பு நந்தியுடையதாக ஒப்படைக்கப் பட்டிருந்தது நந்திக்கு ஈஸ்வரன் மீது அபிமானம் அதிகம் அதனால் அவர் தோற்ற போதுங்கூட ஈஸ்வரனே வென்றதாக அறிவித்தார். பார்வதி கோபத்தால் நந்தியை சபித்தார் நந்தி பார்வதியின் பாதம் பணிந்து பாப விமோசனம் கோர, பார்வதி மனமிரங்கி, ஆவணிச் சதுர்த்தியில் என் மகன் கணபதியின் பிறந்த தினத்தில் உனக்குப் பிரியமான அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்தால் உன் சாபம் நீங்கும் என அருளினார்.

இதிலிருந்து யாருக்கு எது பிடிக்குமோ அதை இறைவனுக்குப் படைத்தால் பாவம் விலகும் என்பது தெளிவாகச் சொல்லப் படுகிறது. இந்தச் சத்தியத்தை ஸ்தாபிப்பது தான் விநாயக தத்துவம்.

உயிர் வாழ்க்கைக்கே தலைவர் விநாயகர் சுயநலம், சுயலாப நோக்கம் இவற்றை வைத்துக் கொண்டு வாழக் கூடாது என்று உணர்த்துபவர் சுயநலத்தை தியாகம் செய்யவேண்டும். பிறர் நலன் நாடி. ஆன்மீக வாழ்க்கை நடத்த வேண்டும் அதன் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் இதுவே நிஜமான விநாயக தத்துவம்.

## ஆரவாரத்தின் மத்தியில் அமைதி காண்பதெப்படி?

சா. சக்திதாசன்

தற்போதைய உலகவாழ்வு மிகவும் பரபரப்புமிக்கது. இயற்கையானது நிதானமான ஒழுங்குப் பாட்டின்படி செயற்பட்டுக் கொண்டிருக்க, தன் கூரிய பகுத்தறிவைக் கொண்டு இயற்கையை ஆராய்ந்த மனிதன, தன் சுகத்திற்கேற்றாற்போல் இயற்கையை மாற்றும் முயற்சியில் பெருமளவு முன்னேறியுள்ளான் என்றே கூறுதல் வேண்டும்.

அவனது முயற்சிகளும், பெற்ற வெற்றிகளும் பல நன்மைகளை அளிப்பதுபோல் தோன்றினாலும். அவற்றினுள் மறைந்திருக்கும் தீய விளைவுகளால் இயற்கையின் சமநிலை குலைந்து கொண்டு போவதையிட்டு எவரும் கவலைப் படாமல் இருக்க முடியாது.

விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தினால் தோற்றம் பெற்ற குளிரூட்டிகளில் உபயோகிக்கப்படும் செயற்பாட்டு வாயுவினால் வளிமண்டலத்தின் ஓசோன்படை துளையிடப்பட்டு, சூரியனின் ஊதாக்கடந்த கதிர்களின் செறிவு பூமியின் மீது விளைவித்துள்ள தாக்கங்கள் இதற்கு ஒரு உதாரணமாகும். இதேபோல் அணுசக்தி கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாக மனிதன் போர்வெறி காரணமாக அணுக்குண்டை வெடிக்கச் செய்யும்போதும். அணுசக்திப் பயன்பாட்டின்போது அணுக்கதிர் தொழிற்பாடுடைய திரவியங்களை அலட்சியமாக கடல்களில் கொட்டுவதன் மூலமும் முழு இயற்கைச் சூழலையும் பாதகமான விளைவுகளுக்கு ஆளாக்கி வருவது மற்றுமொரு உதாரணமாகும்.

இது ஒரு புறம் இருக்க, கட்புலனையும் செவிப்புலனையும் திருப்திப்படுத்தவெனக் கண்டு பிடிக்கப்பட்ட ஒளி, ஒலிச்சாதனங்கள் அவை ஏற்படுத்தும் மிகையான செறிவு காரணமாக கட்புலனையும் செவிப்புலனையும் வெகு விரைவில் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றன எந்திர சாதனங்களிலிருந்து வெளிவரும் எரிச்சலூட்டும் இரைச்சலும், சூழலை மாசடையச் செய்யும் புகை மண்டலமும் மறு புறத்தில் மனிதவாழ்வுக்கு அச்சுறுத்தல் விடுத்துக்கொண்டிருக்கின்றன

மனிதனுக்கு ஏற்படக்கூடிய நோய்களை இனங்கண்டு தீர்க்கும் வழிவகைகள் ஒருபக்கம் கண்டுபிடிக்கப்பட, மறுபக்கம், மனிதனின் கூரிய சிந்தனையாற்றலுக்குச் சவால் விடும் வகையில் புதிய புதிய நோய்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன.

வையக மாந்தரின் பெரும்பாலானவர்களின் நோக்கமெல்லாம் எவ்வாறாயினும், எங்கு சென்றாயினும் எப்போதாயினும் பணம் பெருக்குதல் ஒன்றே ஆக உள்ளது பரபரப்புடனும் பதைபதைப்புடனும் ஒவ்வொரு ஆணினதும் பெண்ணினதும் உள்ளங்கள் இதற்காகவே சிந்தனை செய்கின்றன. உள்ளங்களின் ஏவலினால் ஒவ்வொருவரும் ஓடி ஆடி உழைக்கின்றனர் ஆனால் கடைசியில் கண்ட பயன் என்ன?

அவர்கள் விரும்பியது போல் உழைப்புக்கேற்ற பணம் சில வேளை சேர்ந்தாலும் மன நிறைவு கிடைப்பதில்லை. அமைதியிழந்து உளச் சோர்வுற்று ஊக்கம் குறைந்து வருந்துகின்றனர் வெளிப்பார்வைக்கு ஆரவாரமாய் மகிழ்ச்சியாய் இருப்பது போல் தோன்றினாலும் உண்மையில் உள்ளம் உற்சாகமாய் இல்லை.

(11ம் பக்கம் பார்க்க)

சாந்தியே மனித மனத்தின் சிறப்பியல்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமலர்கள்

## பொறுமை

பொறுமையே சத்யம்
பொறுமையே தர்மம்
பொறுமையே வேதம்
பொறுமையே அஹிம்சை
பொறுமையே அனைத்தும்
பொறுமையே மகிழ்ச்சி
பொறுமையே சுவர்க்கம்

—பாபா—

## தெய்வமே நீ தான்

உண்மை, அன்பு, உயர்நீதி, தர்மத்தை
உயிர் போல நேசித்து உயர்வாக மதித்து
'மனச்சாட்சி'' என்பதை மகத்துவமாக்கி
''தெய்வீக சக்தியே'' தேஜஸ் என அறிந்து,
நேர்வழி சென்றிடின் நேராது துன்பம்

தூய்மையான இறைவன் இதயத்துள் உறைந்திடின்
துன்பங்கள், துயரங்கள் இருந்திட்ட இடமேது
இன்பமும், மகிழ்வும், சாந்தியும், சந்தோஷமும்
இறக்குமதியாகாது இன்னோரிடத்திலிருந்து – எம்
இதயமெனும் தாமரையே,
இவற்றினை மலரவைக்கும்.
இயற்கையான இருப்பிடம்
இதனை நன்குணர்ந்திடின்.
இறைவனே நம்முடன்

தெய்வீகத் தன்மையதை தெரிந்து கொண்டு நடந்தால்
தெய்வமே நீ தான் – பின்
தேடியேன் அலைகிறாய்
தெய்வத்தினை – நீ

—விமலா—

## துன்பம் போ! தூய்மை வா!!

இத்தரை தனிலே
இங்கித மானிடம்
இடர் பட்டுப் போவதேனோ?
பித்தரைப் போல் மனம்
பிற்போக்குத்தனம் கொண்டு
பிழைகளில் நடப்பதேனோ?
விண்வரை செனறாங்கும
விந்தை செய்யும் மானிடன
வீணாக அழிவதேனோ?
மண்ணிதில வஞ்சத்தை
மருளாது ஊட்டியே
மகிழாது மடிவதேனோ?
பாசப் பயிர்களையும்
பண்புப் பசுமையையும்
பாரிலே படரவிட்டு
வேஷத்தை கிழித்து எறி
வெள்ளை மன சுத்தியுடன்
வெளியே வா உலகம் உனதே!
இன்பத்தின் இசைவுகள்
இகமதில் எத்தனை
இறையவன் தந்து உள்ளான்
துன்பத்தின் விதைகளை
தூவி நாம் சென்றிடின்
துயரங்கள் மீதி தானே.....!

மானியூர் ரட்ணேஸ்

## நீங்களும் எழுதலாம்

நீங்கள் எல்லோரும் இறைவனின் தூதுவர்களே! இறைவனுடைய செய்திகளை பரப்பும் உரிமை உங்களுக்கு உண்டு. இறை தூதன் உங்களுடைய பத்திரிகை அதன் வளர்ச்சியில் உங்களுடைய பங்களிப்பு நிறைய வேண்டும்.

இறை தூதன் ஒரு சர்வமதப் பத்திரிகை எந்தச் சமயத்தவராயினும் அந்த அந்தச் சமயச் செய்திகளை ஆன்மீகக் கதைகள், ஆன்மீகக் கவிதைகள், உண்மைச் சம்பவங்கள், அற்புதங்கள் மூலம் இறை தூதனுக்கு சுய பெயர், விலாசமிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். புனை பெயரை விரும்பின் அதைக் குறிப்பிடவும். பத்திரிகையின் வளர்ச்சியை முன்னிட்டு ஆக்கங்களைத் திருத்தி வடிவமைக்கும் உரிமை எமக்கு உண்டு. என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பத்திரிகை பற்றிய உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர் இறைதூதன்
மாணிப்பாய் சத்திய சாயி நிலையம்
ஹலக் லேன், மானிப்பாய்.

## வாழ்க்கைப் பாதை

தூரத்தே தெரியுது அழகிய வீடு
வழியோ ஒரே பள்ளமும் மேடும்
போதாதென்று முற்களும் காலில் குத்த
அழகிய வீட்டாசை மனதை உந்த
போகும் வழி தெரியா மனிதனும் விழிக்க
துணிந்தன கால்கள் எதிர் கொண்டன பாதையை
சென்றடைந்தன வீட்டை
என்னே பரிதாபம் வீட்டாசை முயற்சியில் வென்ற அவனுக்கு
வாழ்க்கை எனும் பாதையை கடக்கத்
தெரியாது விழிக்கின்றானே மனிதன்
வாழ்க்கைப் பாதையை சீராக்கத்
தேவையில்லை மண்வெட்டி, கோடரி
இருக்கவே இருக்கிறது உன்னிடமே
அன்பு, அகிம்சை, பொறுமை, சகிப்புத்தன்மை

சுனேத்திரா. யோ

இறைவனிடம் அசையாத நம்பிக்கை அனைத்தையும் அடைய வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா கேட்ட மூன்று ஆபரணங்கள்



தங்களுடைய கடினமான முயற்சியாலும் சிறந்த எண்ணங்களாலும் புனிதமான பழக்கங்களாலும் இந்த உலகில் எத்தனையோ தாய்மார்கள தங்கள் குழந்தைகளை நல்ல தர்ம வழியில் வளர்கக முற்படுகிறாாகள்.

கல்கத்தாவில் ஒரு தாயும் மகனும் இருந்தார்கள். தன் மகனின் கல்விக்காக தாய் எத்தனையோ தியாகங்களைச் செய்தாள். இருப்பினும் மகனிடம் முக்கியமான பாடம ஒன்றை வற்புறுத்திக் கற்பித்தாள்.

அன்பு மகனே! வெறும் படிப்பினால் மட்டுமே மனிதன் தன் கீழ்மையான குணங்களை விடுவதில்லை. வெறும் இறப்பில் முடியும் பாடங்களை தொடர்ந்து கற்பதில் பயன் என்ன?

எது நம்மை இறப்பிலிருந்து விடுவிக்குமோ அதைப்பயில வேண்டும். ஆன்மீக அறிவு தான் அழியாத் தன்மைக்கு இட்டுச செல்லுமேயன்றி ஏட்டுக் கல்வியல்ல ஆன்மீகக்கல்வி எதையும் தாங்கி நிற்கும் வெறும் உலகியல் அறிவு நிரந்தரமற்றது.ஒருவனது உணவைசம்பாதிக்க ஏட்டுக் கல்வி அவசியம் ஆனால் இந்தக்கல்வி தனிப்பட்டு சுதந்திரமாக வாழவும் குறைந்த ஆசைகளோடு வாழவும் மட்டும் உபயோகப் படுத்தப்பட வேண்டும். ஆகையால் என் அன்பு மகனே! உன்னுடைய பாடங்களைப் படிப்பதுடன் ஆன்மீக அறிவுத் தேடலையும் வளர்த்துக்கொள்.

இவ்வாறாக அந்தத் தாய் தன் மகனுக்கு கல்வியின் உண்மையான இலக்கு என்ன என்பதைக் கற்றுத் தந்தாள். மகனும் கல்வியை முடித்துக்கொண்டு ஒரு சிறிய வேலையில் சேர்ந்தான். ஒருநாள் அந்தக்கிராமத்தில் ஒரு திருவிழா நடைபெற்றது

அந்தக்கிராமத்து பெண்கள் சிறந்த ஆடை ஆபரணங்களை பூண்டு விழாவிற்கு வந்தார்கள் அவனுடைய தாயும் கிழிந்த ஆடைகளுடன் திருவிழாவிற்குப் போனாள. மகனால் அதைக் காணச்சகிக்கவில்லை. அவன் சொன்னான்.

'அம்மா உங்களிடம் நல்ல ஆடைகளோ நகைகளோ கிடையாது. உங்களை இப்படிக் காண எனக்கு வருத்தமாக இருக்கிறது. உங்களுக்கு என்ன நகைகள் தேவை என்னிடம் சொல்லுங்கள் அம்மா'' என்றான். தாய் பதில் கூறினாள், இது இதற்கு தகுந்த நேரமல்ல. நேரம் வரட்டும் நானே உன்னிடம் சொல்கிறேன்.

அந்தப் புத்திசாலி மகனின் நல்லொழுக்கமும் சீலமும் அவனைப் பதவியில் உயர்த்தியது. மீண்டும் அவன் தாயிடம் வந்தான் அவளுக்கு என்ன நகைகள் தேவையெனக் கேட்டு.

**– பாபா –**

'எவ்வளவு முடியுமோ அவ்வளவு வாங்கித் தரத் தயாராயிருக்கிறேன்' என்று சொல்ல தாய் சொன்னாள்,

''எனக்கு மூன்று ஆபரணங்கள் தேவை ஆனால் பிறகு தான் அவை என்ன என்பதை சொல்லுவேன்' என்றாள்.

நாட்கள் வருடங்களாக நகர. மகனும் மேலும், மேலும் பதவி உயர்வு பெற்று மிக உயர்ந்த நிலைக்கு வந்து விட்டான். மீண்டும் தாயிடம்,

''அம்மா என்னிடம் இப்போது நிறைய பணம் இருகிறது உங்களுக்கு என்ன நகை வேண்டும்'' சொல்லுங்கள்; அவற்றை நான் வாங்கி வருகிறேன்.

தாய் சொன்னாள் அன்பு மகனே! நான் இப்போது நகை அணிந்து கொள்ளும் நிலையில் இல்லை இருந்தாலும் சில ஆபரணங்களின் மேல் எனக்கு விருப்பம் உள்ளது.

நமது சிறிய கிராமத்தில் குழந்தைகள் எல்லாம் வெகுதூரம் சென்று கல்விபயில வேண்டியிருக்கிறது. அது எனக்கு வருத்தமளிக்கிறது. என்னுடைய முதல் ஆபரணம, நீ முதலில் நம்முடைய கிராமத்தில் ஒரு ஆரம்பப்பள்ளி நிறுவ வேண்டும், இது என் ஆசை.

## சிறுகதை

இரண்டாவதாக சிறிய நோய்களுக்குக்கூட நம் கிராமத்தில் மருந்துவ வசதிகள் கிடையாது. கிராம மக்களை நினைத்து நான் எத்தனையோ தூங்காத இரவுகளைக் கழித்து விட்டேன். இவர்களுக்காக நீ ஒரு சிறிய மருத்துவ விடுதி அமைத்தால், அது தான் எனது இரண்டாவது ஆபரணம்.

என் மூன்றாவது நகை நீயே உருவாக்க வேண்டியது. காலம் செல்லச்செல்ல உன் பெயரும் புகழும் வளரும் யாராவது உன்னை 'யார் உன் தாய்?' என்று கேட்டால் நீ என் பெயரைச் சொல்லலாம். உன்னுடைய நடத்தை என்பெயரை நிலை நிறுத்துவதாக அமைய வேண்டும். உன் கல்வியால் விளைந்த நன்மைகளை நீ மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் செல்வத்தைத் தேடி அலையாதே. சாத்தானை வணங்குபவன் கடவுளுக்காக ஏங்க மாட்டான். கடவுளை விரும்புபவன் செல்வத்தின் மேல் பற்று வைக்க மாட்டான். நீ இந்த வார்த்தைகளைப் பூரணமாக பின் பற்றுவதுதான் நான் உன்னிடமிருந்து அடையவிரும்பும் மூன்றாவது ஆபரணம்.

இந்த வார்த்தைகளைத் தன் தாயிடமிருந்து கேட்டுப்பிறகு புகழின் உச்சிக்குப் போனவர் ஈஸ்வர சந்திர வித்யா சாகர். கல்கத்தாவில் அவர் மிகவும் சிறந்த பெயர் பெற்றார்.

ஒரு முறை அடுத்த கிராமத்தில் பேசுவதற்காக போய்க்கொண்டிருந்தார். அவர் பேசுவதைக்கேட்க அதிகளவில் மக்கள் கூடினார்கள். ஒரு இளம் அதிகாரி, ஈஸ்வர சந்திர வித்யா சாகர் பேச்சைக்கேட்க புகைவண்டியில் இருந்து சிறு பெட்டியுடன் இறங்கினான். அவனுக்கு பேச்சைக் கேடக வேண்டிய அரங்கம் வரை தன் பெட்டியைத் தூக்கிவர கூலியாளைத் தேடினான்.

அதே வண்டியில் இருந்து இறங்கிய ஈஸ்வர சந்திரர் அவனிடம் சென்று கூறினார். இந்தச் சின்னப்பெட்டியை தூக்கவர கூலியாளா இதை நீங்களே தூக்கிச் சென்று பணத்தை மிச்சம் பிடிக்க முடியாதா'? என்றார்.?

அந்த அதிகாரி சொன்னான்.

'என்னுடைய தகுதிக்கு பெட்டி தூக்குவது தகாது'' நான் பெரிய படிப்புப் படித்தவன், என்றான். ஈஸ்வரன் சங்கரர் சொன்னார், நன்கு கற்ற கல்வியின் அடையாளம் அடக்கமே தவிர ஆடம்பரமல்ல. உன்னுடைய சுமையை நீ சுமக்க முடியாவிட்டால். நான் உன்பெட்டியைச் சுமக்கிறேன். என்று சொல்லிவிட்டு ஈஸ்வர சந்திரர் அந்தப் பெட்டியை தூக்கிக் கொண்டார்.

அவர் இப்படியான கொள்கையில் எளிய வாழ்க்கை உயர்ந்த எண்ணங்கள் கொண்டு செயல் பட்டார், பெட்டியைத் தூக்கி வந்த வித்யா சாகர் அந்த அதிகாரி போக வேண்டிய இடம் வரை வந்து பெட்டியை வைத்தார்

அந்த இளம் அதிகாரி போட்டருக்கு பணம் தர முற்படுவதுபோல பணம் தரமுன் வந்த போது ஈஸ்வர சந்திரர் சொன்னார். உனக்கு. சேவை செய்வதே எனக்குப் பரிசு தான்' என்றார்

அதன் பிறகு அந்த அதிகாரி தான் செல்லவேண்டிய லெச்சர் ஹோலுக்குப் போனான். அங்கே மக்கள் ஈஸவர சந்திர சாகரருக்கு மலர் மாலைகள் அணிவித்து வரவேற்பதைக் கண்டான் அப்போது தான் தன் பெட்டியைத்தூக்கி வந்தது மதிப்புக்குரிய பேச்சாளர் என்பதை உணர்ந்து கொண்டார்.

> **இன்றைய மகன்மார்**
>
> இன்று பல மகன்கள் தம்முடைய சம்பாத்தியத்தை தன்னுடைய சுகங்களுக்காக உபயோகிக்கிறார்களே தவிர, தாய்க்கு அதில் இருந்து ஒரு காசும் தருவதில்லை. இப்படிப்பட்ட மகன்கள் எல்லாம் மனிதப் பிறவிகளா? அவர்கள் மனிதர்களேயல்ல அவர்களுடைய படிப்பு வீண் நாட்டுக்கு அவர்களால் என்ன பயன்?
>
> —பாபா—

அவ்வளவு பெரியமனிதரை தன்பெட்டியைச் சுமக்க வைத்ததை எண்ணி வெட்கப் பட்டான் அவன் நினைத்து பார்த்தான் அவருடைய கல்வியின் தரம் எங்கே.? நான் எங்கே? நான் ஒரு சிறிய குரங்கு மாதிரி நடந்து கொண்டு விட்டேன் நான் அந்தச்சூரியனுக்கு முன்னால் வெறும் மின் மினிப் பூச்சி.

தன் மகனின் பெயரையும் புகழையும் கேள்விப்பட்ட தாய் ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள் இப்படிப்பட்ட ஒரு மகனைப் பெற்றதால் என் ஜன்மம் சாபல்யமாகியது. இனிமேல் எனக்கு என்ன ஏற்பட்டாலும் கவலை இல்லை என்று அவள் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

குணங்களால் நல்லவரே நல்லவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையே மாதவன் சேவை

## சிறுகதை

செருப்பு தைக்கும் தொழிலாளி மார்ட்டின் மார்பின் மீது புனித நூலான பைபிளை வைத்துக் கொண்டு மனத்தில் கிறிஸ்துவின் அறிவுரைகளை உன்னித்துக் கொண்டே உறங்கினான்.

''கவனியுங்கள்! நான் கதவருகே வந்து தட்டுவேன் எந்த மனிதனாவது என் குரலைக் கேட்டு கதவைத் திறந்து விட்டால், நான் அவன் வீட்டுக்குள் வருவேன், அவனோடு உணவு உண்பேன்'' அவனோடு உறைவேன்.

''அது போன்று மேற்கொண்டு வருபவனுக்கு என்னுடைய சிம்மாசனத்தில் என்னோடு அமரும் பேற்றை அருளுவேன். நானும் அது போலவே வந்து என் தந்தையாரோடு அவருடைய சிம்மாசனத்தில் அமர்வேன்''

இறைவன் அன்று இரவு அவன் உறங்கும் போது அவன் கனவில் வந்த மறுநாள் அவனைப் பார்க்க வருவதாக உறுதி கூறினார்.

அதனால் மறுநாள் விரைவாக தன் பணிகளை முடித்து விட்டு இருவருக்கான உணவு, தேநீர் இவற்றை ஆயத்தம் செய்து சூடாக இருக்க அடுப்பில் வைத்து விட்டு வழிமேல் விழி வைத்து இறைவன் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்தான்.

காலையில் பனிபெய்து கொண்டிருக்கும் போதே அவன் கண்களில் முதலில் பட்டது. தெருக்களைச் சுத்தம் செய்யும் நகர் மன்றப்பணியான். மக்கள் விழித்தெழுந்து கதவுகளைத் திறப்பதற்கு முன் அவன் தெருவைச் சுத்தம் செய்து முடித்து விடவேண்டும்.

அவனைக் கண்ணுற்ற மார்ட்டின் பரிதாபப் பட்டான். வீடுகளில் உள்ளவர்கள் தனல் அடுப்புகளை மூட்டி சூடான அந்த அறைகளில் ஆனந்தமாக உறங்குகிறார்கள் அவர்களுடைய கதவுகளிலும் யன்னல் வெளிப்புறங்களிலுமுள்ள பனிக்கட்டிகளை அப்புறப் படுத்துவதற்காக வயதான அந்தப் பணியாள், குளிரில் விறைத்துப் போய் வேலை செய்து கொண்டிருந்தான்

இந்த எதிர்மாறான நிகழ்ச்சிகள் மார்ட்டினின் மனத்தைத் தாக்கித் துன்புறுத்தின.

அவன் அந்த வயோதிபரை வீட்டினுள் அழைத்து நடுங்கும் குளிரிலிருந்து அவனைக் காப்பாற்றினான். தனல் அடுப்பருகே குளிர் காயச் செய்தான். தன் பங்கு தேநீரையும் கொடுத்து உபசரித்தான். அவ் வயோதிபர் மார்ட்டினுக்கு நன்றி கூறி பணியாற்றச் சென்றார்.

அடுத்ததாக மார்ட்டின் தன் வீட்டருகே பசியினாலும், குளிரினாலும் வாடியவளாய் ஓர் அடி கூட எடுத்து வைக்க இயலாது துவண்ட ஒரு வயதான பெண்மணியைக் கண்டான்.

உடனே அவன் அப்பெண்மணியை உள்ளே அழைத்து கம்பளி போர்வையை அவளுக்குக் கொடுத்து தன் பங்கு உணவையும் கொடுத்தான் அவளும் உண்டு முடித்து அவனை வாழ்த்திச் சென்றாள்.

அடுத்தபடி அவன் கண்டது பசியினால் துடிக்கும் குழந்தையை சுமந்து சென்ற ஒருதாய் அவளையும் மார்ட்டின் உள்ளே அழைத்து கடவுளுக்காக வைத்த உணவையும், பாலையும் அவர்களுக்குக் கொடுத்தான். உடைகளையும் கொடுத்தான்.

இதற்குள் சூரியன் மங்கத் தொடங்கி விடவே இனிமேல் இறைவனை எதிர் பார்ப்பது இயலாத செயலாகி விடவே துயரமும், ஏமாற்றமும் அடைந்த மார்ட்டின் சோர்வுற்று தன் நாற்காலியில் அமர்ந்தான்.

ஒரு வேளை அந்த நேரத்தில் ஆண்டவன் வந்து விட்டால் அவருக்கு கொடுக்க அவனிடம் எதுவுமே இருக்கவில்லை. இந்த நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டு மனம் துயருற்றது. துயரத்தினால் மனதில் இருள் கவ்வியது.

அப்போது தன் குடிசைக்குள் யாரோ நடப்பது போன்ற காலடி ஓசையைக் கேட்டான் மார்ட்டின். அவர் அந்த வீட்டினுள் ஓர் ஒளியை ஏற்றுவதைக் கண்டான். மனக்குழப்பத்தில் இருந்ததால் வீட்டினுள் அவன் விளக்குக் கூட ஏற்றவில்லை அதனால் திடீரென்று வீட்டினுள் ஒளியைக் கண்டதும் வியந்து திடுக்குற்றான்.

அந்த ஒளி வெள்ளத்தில் அவன் குளிரில் நடுங்கிய வயதான நகர்மன்ற பணியாளைக் கண்டான் நன்றி கூறிவிட்டு அவன் மறைந்ததும் அடுத்து அந்த வயதான பெண்மணி வந்து மார்ட்டினை வாழ்த்தி விட்டகன்றதும இறுதியாக பசியால் வாடிய தாயும் சேயும தோன்றினர் அவர்களும் அவனை வணங்கி விட்டு மறைந்தனர்.

> **மனிதனுக்குச் செய்யும் சேவையே இறைவனுக்குச் செய்யும் சேவை. மானவ சேவையே மாதவ சேவை. இறைவனை அடைவதற்குரிய உண்மையான சாதனை சேவையாகும்.**

பிறகு அந்த ஒளியில் தோன்றுவது யார்? முன் வந்த எவரும் இல்லை! ஆ! அது இறைவரே தான் காலையிலிருந்து மார்ட்டின் அவருக்குத்தான் பணிபுரிந்து வந்திருக்கின்றான்.

''நான்தான் அங்ஙனம் வந்ததும நானே தான்!

என்று மகிழ்ந்து கூறிவிட்டு அவனை அரவணைத்து வாழ்த்தி விட்டு மறைந்தது.

* * *

# அல்லா விரும்பும் மனிதன்

000

நபி ஸல்லல்லாஹு ஸல்லம் அவர்கள் காலத்தில் ஒரு கிராமப் புறத்து மனிதர் வாழ்ந்தார் அவரது பெயர் ஸாஹிர். அவரின் அவலட்சமான தோற்றம் காரணமாக மக்கள் அவருடன் சேர்ந்து வாழ்வதில்லை. ஆனால் நபி மணி ஸல்லல்லாரு அவர்கள் அந்த மனிதருடன் அன்பாகப் பழகினர் அவர் அன்பளிப்புக்கள் கொண்டு வந்தால் அதனை ஏற்றுக்கொள்வார் ஒரு நாள் அம்மனிதர் சில பொருட்களை விற்பனைசெய்து கொண்டிருந்தார் நபி அவர்கள் அம்மனிதனுக்குப் பின்புறமாக வந்து அவரைக் கட்டித் தழுவினார் அவரால் திரும்பிப் பாக்க முடியவில்லை. யார் தம்மைப் பிடித்திருக்கிறார் என்பதையும் அறியமுடியவில்லை.

அம்மனிதர் யார் நீர் எனக் கேட்டார். பின்னர் அம்மனிதர் சிரமப்பட்டுத் திரும்பிப் பார்த்தார். அங்கு நபி அவர்கள் நிற்பதைக் கண்டார் தன்னுடன் நபி அவர்கள் நெருக்கமாக அன்பாகப் பழகிய முறை கண்டு மகிச்சியடைந்தார் இந்த அடிமையை யார் வாங்க விரும்புகிறீர்கள் என அம்மனிதனைச் சுட்டிக்காட்டி நபி அவர்கள் கேட்டார்கள்.

''நான் அருவருப்பான மனிதன் பெறுமதி அற்றவர்'' என்று அவர் சொன்னார்.

இல்லை நீங்கள் அல்லாவிடத்தில் மிக்க பெறுமதியுள்ளவர் என நபி அவர்கள் கூறினார்.

> நபி யூசு அலகிவ ஸலாம் அவர்கள் அரசராக இருக்கும் போது ஒருவர் அவர்களிடம் வந்து ''நபி அவர்களே! தங்களிடம் செல்வங்கள் குவிந்திருக்கின்றன. இருந்தும் நீங்கள் ஏன் பசியுடன் இருக்கிறீர்கள்'' என்று கேட்டார்.
>
> யூசு அலிலவ ஸலாம் அவர்கள் நான் பசித்திருந்தால் தான் பசித்திருப்போரின் கஷ்டங்களை உணரமுடியும் அவர்களைப்பற்றிய எண்ணத்தை எனது மனதில் பதித்திருக்க முடியும். அதை விடுத்து சாப்பிட்டு பசியற்றிருந்தால் பசியுடனிருப்போரின் துன்பத்தை உணரமுடியாமல் போய்விடும் இதனால் தான் பெரும்பாலும் நான் பசித்திருக்கிவேன் என்றுகூறி வைப்பார்கள்.

நாம் செய்வதனைத்தும் இறைவன் பணி என்ற நினைப்புடன் செயலாற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் – 5

சென்ற இதழ் தொடர்ச்சி

### தருமவழி

நாம் செல்வம் சேர்க்க வேண்டும் எவ்வாறு......? தருமத்தின் வழியில் சம்பாதிக்க வேண்டும். ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளுங்கள் எவ்வாறு? தருமத்தின் வழியில் சென்று நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

இறைவனையும் தருமத்தையும் விட்டு விலகி ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளுதல் இயலாத காரியம். இதற்கு ஒரு சிறு உதாரணம்.

தருமம், இயற்கை (பிரகிருதி) யின் வடிவம். தருமம் இயல்பான வடிவத்தில் உள்ளது. தருமத்திற்கு சுதந்திரம் இல்லை. தருமத்திற்கு ஒரு எசமனான் உண்டு. அவ்வெசமானரே இறைவன். தர்ம அர்த்த. காம, மோட்சம் என்ற புருஷார்த்தங்களில், தர்மத்தைக் கைவிட்டு, அர்த்தம் (செல்வம்) காமம் (ஆசை) இவற்றையே நாடினான் இராவணன்.

அதன் விளைவாக இராவணனின் தீய குணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தன இராவணன் சிறந்த கல்விமான் 64 விதக் கல்விகளையும் கற்றவன். இராமன் 30 விதக் கல்விகளில் தான் சிறந்தவன். ஆனால் இராமன் தான் கற்ற கல்வி அனைத்தையும் நன்கு புரிந்து கொண்டு வாழ்க்கையில் கடைபிடித்தான்.

இராவணன் தான் கற்றதனைத்தையும் வாழ்க்கையில் கடைப்பிடிக்காததால் அவனுக்கு அஜீரணம் ஏற்பட்டது. அவனது காமமே இந்த அஜீரண யோகம் தருமம் சீரணிக்கச் செய்ய வல்ல மருந்து.

இராமன் தருமத்தின் வடிவம், இராவணன் காமத்தின் வடிவம் காமம் அதர்மமானது தர்மத்திற்கும், அதர்மத்துக்கும் இடைவிடாது போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இராமன் தருமத்தின் படியே நடந்ததால் அவர் தருமத்தின் வடிவமானார். இராவணன் தருமத்தைக் கடைப்பிடிக்காததால், அவன் அதருமத்தின் வடிவமானான்.

### நித்தியமானது

சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் இடையிலும் சதா போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. சத்தியம் நித்தியமானது. என்றுமுள்ளது. அசத்தியம் தற்காலிகமானது. நிரந்தரமான ஒன்றுக்கும் தற்காலிகமான ஒன்றுக்கும் எப்போதும் இடைவிடாத போட்டி நிகழ்கிறது. ஆகவே தற்போது சத்தியத்தையும் தர்மத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் இவை இரண்டைத்தவிர இறைவன் வேறில்லை.

அன்பின் இயல்பை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்: அன்பு வெளிப்பட்ட பிறகு தான் தார்மீகத்தைக் கடைப்பிடிக்கின்றோம். அத்தகைய தர்மம் சத்தியமாகிறது இவ்விரண்டையும் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். இராமனிடம் உள்ள தார்மீகம் அளவற்றது. அதை நாம் பின் தொடர வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தர்மமே. தர்மத்தைப் பின் பற்றுகிறவன் உண்மையான மனிதன். எரியும் தன்மை, நெருப்பின் தர்மம். எரியாவிடில் அது நெருப்பு அல்ல. வெறும நிலக்கரி, ஐஸ் குளிர்ச்சியாக இருக்கிறது. குளிர்ச்சியாக இல்லாவிடில் அது ஐஸ் அல்ல.

### தெய்வீக வாழ்க்கை

மனித சமுதாயத்தின் இயல்பு என்ன? மனிதன் இதயம் கூறும் முறையில் நடந்து, உண்மைபேசி, தார்மீக வழியிலே நடக்க வேண்டும். திரிகரண சுத்தியுடன் நாம் என்ன செய்தாலும் அது தர்மமாகவே இருக்கும் தர்மத்தை அனுசரித்து நடத்தலே தெய்வீக வாழ்க்கையாகும்.

இக்காலத்தில் கூறப்படும் பல தர்ம மார்க்கங்களுக்கு இடையே ஒரு விதமான தொடர்புமில்லை. தர்மம் என்ற சொல்லை நாம் பயன் படுத்துகின்றோம். ஆனால் அதன் பொருள் என்னவென்று நமக்குப் புரியவில்லை. தருமத்தில் பல வகை உண்டு. குடும்பதர்மம், சந்நியாச தர்மம், பிரம்மச்சரிய தர்மம், என்று பல வகையுண்டு. இதய சாட்சியின்படி நடத்தலே எல்லோருக்கும் பொதுவான தர்மம்.

மனிதத் தன்மையில் தெய்வீகம் உள்ளது. தெய்வீகத் தன்மையில் மனிதத்தன்மை உள்ளது. இரண்டும் சேர முழுமையாகிறது. இராவணன் இதைப் புரிந்து கொள்ளாததால், அவன் மனிதனைப்பூச்சி போன்றவன் என நினைத்தான். மனிதனை அலட்சியப் படுத்தினான். உண்மையில் அனைத்து ஆற்றலும் மனிதனுக்குள் மறைந்து உள்ளது.

### அவதாரம்

இலட்சிய வாழ்வை அடைவதற்கு அவதாரத்தின் இயல்பை பின்பற்ற வேண்டும் இறைவன் மனிதனாக வடிவம் கொள்கிறார். அவ்வடிவைககண்டு நாம் ஏமாறலாகாது. நமது உடல் போன்றதாக அவ்வடிவதைக் கருதலாகாது இரண்டும் ஒன்று போலத் தோன்றும். கடவுள் மனிதனாகத்தான் அவதரிக்க வேண்டும். காரணம் என்ன ?

மனிதன் மட்டுமே தனது தர்மத்தில் இருந்து விலகியிருக்கிறான். மனிதனைக் காப்பாற்ற கடவுள் மனித வடிவு தான் எடுக்க வேண்டும். விலங்குகளும், பறவைகளும் பூச்சி, புழுக்களும் அவரவர் தர்மத்தை ஒழுங்காகக் கடைப் பிடிக்கின்றன. எனவே அவதாரம் அத்தகைய வடிவில் தேவையற்றது

அனைத்து தர்மங்களையும் மறந்து அதர்மத்தில் வாழ்ந்து மனிதத்தன்மை என்னவென்று புரியாமல் தெய்துவத்தையும் மறந்து வாழ்பவன் மனிதன் மட்டுமே. ஆகவே மானிடவடிவில் அவதாரம் நிகழ்வது அவசியமாகிறது மனினைத் திருத்த அவதாரம் அவசியம்.

இக்காரணத்தினாலேயே இராமர் வடிவில் இறைவன் அவதரித்தார். மனித சமூதாயத்திற்கே விடுதலை தேவைப்படுகிறது. மிருகம், பறவை, பூச்சிகளுக்கல்ல. மனிதன் தான் உண்மையற்று இருக்கிறான். மனிதப்பண்புகளை எல்லாம் மறந்து விட்டான். மறந்து தொலைத்தவற்றை திரும்பவும் பெற்று மனிதனாக தன்னை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை பார்வதிதேவியாகப் பார்த்த ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்ஸர்

ஒரு முறை ஒரு பக்தர் ஸ்ரீ இராம கிருஷ்ணரை நோக்கி,

நீங்கள் ஏன் பத்தினியுடன் இல்லற முறையில் வாழவில்லை..? என்று கேட்டார். அதற்கு பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்ஸர் ஒரு கதையைச் சொன்னார்.

ஒருநாள் பரமசிவனுடைய குழந்தையாகிய கணேசன் ஒரு பூனையை நகத்தால் கீறிக் காயம் பண்ணி விட்டான். பிறகு தாயிடம் திரும்பிப் போனபோது அவளுடைய கன்னத்தில் ஒரு காயம் இருக்கக் கண்டு அம்மா இதென்ன உங்களை யார் காயப்படுத்தியது? என்று கேட்டான். அதற்குப் பார்வதி,

மகனே...! இது நீ செய்த வேலையல்லவா ? உன் நகத்தினால் கீறின காயம் இது என்றாள்.

இதென்ன விபரீதம்...? நான் எப்போது உன்னைக் கீறினேன் அம்மா...? என்றான் கணேசன்.

கண்மணி... நீ பூனையை தொந்தரவு செய்து கீறியதை மறந்து விட்டாயா...? என்றாள் கௌரி.

ஆமாம் கீறினேன் அது எப்படி உன் கன்னத்துக்கு வந்தது...? என்று கணேசன் கேட்டான்.



மகனே உலகமெல்லாம் என் உடல் தானே...? யாருக்கு என்ன காயம் உண்டானாலும் அது எனக்கு உண்டான காயமே. என்றாள் தாய்.

இதற்கு மேல் கணேசர் யாரை விவாகம் செய்து கொள்ள முடியும்...? எந்தப் பெண்ணைக் கண்டாலும் அவளைத் தன் தாயாகவே கண்டான் கணேசன்.

பெண்மை அனைத்தும் தாயாகவே போய்விட்டது. விவாகம் செய்து கொள்ளும் எண்ணத்தையே ஒழித்தான். கணேசர் போலவே என் கண்களுக்கும் அப்படியே. எந்தப் பெண்ணும் பார்வதி அம்மனாகவே தோற்றம் தருகிறாள். நான் என்ன செய்வது ? என்றார். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்ஸர்.

அழகிய ஒரு பெண்ணைப் பார்க்கும் போது உலக மாதாவாகிய தேவியை தியானிக்க வேண்டும். முன் நிற்கும் பெண் உலகமாதாவின் பல உருவங்களில் ஒன்று என்று நினைவூட்டிக் கொண்டு, இது தேவியின் அவதாரம். என் தாய் மகாதேவி எனக்குத் தரிசனம் தருகிறாள் என்று முன் நிற்கும் தாயை வணங்க வேண்டும். உன் உள்ளத்தை குழந்தை பாவத்தில் நிறுத்திக் கொள்ளவேண்டும். தாயைக் கண்டால் வேறு எண்ணங்களுக்கு இடம் ஏது ? இந்த உபாயத்தைத் தான ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஆரம்பத்தில் இருந்தே கையாண்டார்.

**ஸ்ரீ இராமகிருஷ்ணர் சமாதி அடைந்த தினம் ஆவணி 16**

விவேகமும் கல்வியும் பெற்றவர்களும் கூட காம வேகத்திற்கு இரையாகி விடுவதுண்டு. இந்த அபாயத்தில் இருந்து காப்பாற்றிக் கொள்ள இராமகிருஷ்ணர் உபதேசித்து இருக்கும் இந்த உபாயம் மிகச் சிறந்ததாகும்.

# நம்பிக்கை அற்புதம் செய்யும்

ஒருமுறை ஒரு யூத மேலதிகாரி இயேசுவிடம் வந்து, அவர் முன் முழந்தாளிட்டுக் கூறினார்.

''என் மகள் இப்போது தான் காலமானாள். ஆனால் நீங்கள் வந்து அவள் மேல் தங்கள் கையை வைத்தால் அவள் உயிர் பிழைப்பாள்.

இதைக் கேட்ட இயேசுநாதர் எழுந்து அவரைப் பின் தொடர்ந்தார். அவருடைய சீடர்களும் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

பன்னிரண்டு வருடங்களாக மாறாத நோயினால் துன்புற்ற பெண்மணி ஒருவர் அச்சமயம் இயேசுவின் பின்புறம் வந்து,

''இவரது மேலங்கியை மட்டும் நான் தொட்டால் நான் குணமடைந்து விடுவேன்.'' என்று நினைத்தாள்.

கூட்டத்தில் அவரின் பின் வந்து அவரது அங்கியின் நுனியைத் தொட்டாள் அவள் நோய் அக்கணமே அவளை விட்டகன்றது. இயேசு கேட்டார்.

''என்னைத் தொட்டது யார்?''

எல்லோரும் இல்லை என்றார்கள். பீட்டர் கூறினார்.

''பிரபு, மக்களெல்லோரும் உங்களைச் சூழ்ந்து நெருக்குகின்றனர். யார் உங்களைத் தொட்டார்கள் என்று நாங்கள் கண்டு பிடிக்க முடியும்?''

ஆனால் இயேசு கூறினார். ''யாரோ என்னைத் தொட்டார்கள் எனக்குத்தெரியும். என்னிடமிருந்து சக்தி வெளிச் சென்றதை நான் அறிவேன்.''

அப்பெண்மணி நடுங்கியபடியே முன் வந்து பிரபுவின் காலடியில் விழுந்தாள். இயேசு கூறினார்.

''மகளே, உன் நம்பிக்கை உன்னைக் குணப்படுத்தி முழுமையாக்கியது. அமைதியுடன் செல்வாயாக.

இயேசு மேலதிகாரியின் வீட்டிற்குச் சென்றார். குழந்தையின் இறுதிச் சடங்குகளுக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தன. இயேசு இறந்து போன குழந்தையைப் பார்த்து,

''குழந்தாய் எழுந்திரு'' என்றார். தூக்கத்திலிருந்து விழித்தவள் போல அக்குழந்தை எழுந்திருந்தாள்.

## கடவுளை நம்பு அவர் கவனிப்பார்

உண்ண உணவையும், குடிக்க நீரையும், உடுக்க உடையையும் பற்றிக்கவலைப் படாதே பரமண்டலத்திலிருக்கும் பரமபிதா உன்னுடைய தேவைகளைப்பற்றி நன்கறிவார் இவற்றிற்குப்பதில், அவருடைய சாம்ராஜ்யத்துக்கும் அவர் வேண்டுவது என்ன என்பதற்கும் முக்கியத்துவம் கொடு அவர் உன்னுடைய உண்மையான தேவைகளைக் கவனித்துக் கொள்வார். வானத்தில் பறக்கும் பறவைகளைப்பார். பரமபிதா அவைகளுக்கு உணவளிப்பதில்லையா? வயலில உள்ள மலர்களைப்பார் எவ்வாறு வளர்கின்றன என்பதைக் கவனி. ஆகையால் முதலில் இறைவனின் சாம்ராஜ்யத்தைத் தேடிகொள் அவரது நன்மதிப்பை சம்பாதித்துக் கொள் அவர் உன்னைக் கவனித்துக்கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வபலம்

## உருவகக்கதை

கடலோரத்தில் வாழும் ஒரு சிறு பறவை கடலோரத்திலேயே தனது முட்டைகளை இட்டு வைத்தது. அது தன் குஞ்சுகளுடன் வசதியாக வாழ விரும்பியது.

ஆனால் ஆவேசமாக வரும் அலைகள் அடிக்கடி வந்து முட்டைகளை அடித்துக்கொண்டு கடலுக்குள் சென்று விடும்.

சிறு பறவையின் மனம் தளர்ந்து விட்டது ஒவ்வொரு தடவையும் முட்டைகள் கடலுக்குள் போய் விடுவதால் சற்று சோர்வும் அடைந்து விட்டது.

அதனால் அந்தச்சிறு பறவை கடலின் மீது மிகவும் கோபம் கொண்டது அப்படிப்பட்ட சிறு பறவை இப்படிப்பட்ட பெரிய கடலை என்ன செய்து விட முடியும்?

### -பகவான் பாபா-

ஆனால் பரந்து விரிந்த கடலுக்கு எதிராக மிகச்சிறிய பறவையால் ஒன்றும் செய்து விட முடியாது என அந்தப்பறவை நினைக்கவில்லை மாறாக இருந்தது அதனுடைய சிந்தனை பெருங் கடலை நோக்கி,

''ஏய் பெரிய கடலே! சிறு பறவை என்றும் பாராமல் எனக்கு துன்பம் விளைவிக்கும் உன்னைச் சும்மா விட மாட்டேன் இதோ கடல் நீர் முழுவதையும் குடித்து விடப் போகிறேன்.''

ஆவேசமாகக் கூறியபடி கடல் நீரை வற்ற வைப்பதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு அது மிக உறுதியாக செயல்பட முடிவெடுத்தது.

இரவு பகலாக அது கடற்கரையில் நின்று கொண்டு தனது அலகை கடலுக்குள் விட்டு மூக்கு வழியாக சிறிது நீரை உறிஞ்சி அதைக் கரையில் கொட்டியது.

இப்படி ஏராளமாக உறிஞ்சி, உறிஞ்சி கடல் முழுவதையுமே காலி செய்து விடவேண்டுமெனத் தீர்மானித்தது. இப்படிச் செய்தால் அது இறுதியில் கடலை வென்று விடலாம் என்று நம்பியது.

சிறு பறவையின் சிந்தனை ஓட்டத்தினையும் செயலையும் கண்டு பெருங்கடல் ஆரவாரித்து துள்ளிக் குதித்தது, ஏளனம் செய்தது.

ஏய்; சிறு பறவையே! உன்னால் என்னை வெல்ல முடியுமா? பார்ப்போம்! என்று அட்டகாசமாகச் சிரித்தபடி அலை அலையாக கடல் நீரை வாரி சிறுபறவை மேல் இறைத்தது பெருங் கடல்.

தன் சொந்த முயற்சியில் அந்தக்காரியத்தைச்செய்து முடிப்பது மிகவும் இயலாத ஒன்று என்பதை உணர்ந்து அந்தப்பறவை விஷ்ணுவின் வாகமான கருடனின் உதவியை நாடியது கருடனின் உதவியால் மகா விஷ்ணுவின் அருளை பறவையால் பெற முடிந்தது.

இப்போது பெருங்கடல் மிகவும் பயந்து விட்டது அந்தச்சின்னப் பறவையிடம் பணிவுடன் மன்னிப்புக் கேட்டது.

''சின்னப் பறவையே! என்னை மன்னித்து விடு இனி மேல் நான் ஒரு கஷ்டமும் உனக்குத் தரமாட்டேன். கடல் அலைகள் உன் முட்டைகளை இனி ஒரு போதும் அழிக்க விடமாட்டேன் உன் முட்டைகளை தாராளமாகக் கரையிலே வைத்துக் கொள்ளலாம்'' என்று அனுமதித்தது சிறு பறவைக்கு உறுதி அளித்தது.

அந்தச் சிறுபறவை எவ்வளவு சிறியது கடல் எவ்வளவு பெரியது இருந்தும் தன் வைராக்கியத்தாலும், மன உறுதியாலும் ஆத்மபலத்தை பெருக்கி ஆண்டவனின் அருள் பெற்று பெருங் கடலை வென்றது

* * *

5ம் பக்கத் தொடர்ச்சி

### ஆரவாரத்தின் மத்தி ......

அவர்களோடு நெருங்கிப் பழகுபவர்க்கு உடனே அவர்களது மனநிலை தெரிந்து விடும். சிறிச்சினப்பதும், அலுத்துக் கொள்வதுமாக அவர்களின் போக்கு இருக்கும் இவ்வாறான ஒரு மனநிலையைச் சீராக்குவதற்கு எங்காவது இலகுவான வழி கூறப்பட்டிருக்கிறதா?

ஆம்! பகவத்கீதையிலே கடமையை எந்த மனோபாவத்தோடு ஆற்றவேண்டும். என வலியுறுத்தப் பட்டுள்ளது. சுயநலப்பற்றின்றிக் கடமையைக் கடமைக்காகவும், கடவுளின் ஒரு ஆணையாகவும் ஏற்றுச் செய்யவேண்டும். என்பதே அம்மார்க்கமாகும். கடமையின் பலனை ஆண்டவனுக்கு அர்ப்பணமாகச் செய்யும் போது செயலின் விளைவாகத் தோன்றும் நன்மை தீமைகளுக்குரிய பலன்கள் செயல் புரிபவரைச் சாராது அதற்கு ஆண்டவனே பொறுப்பாக இருப்பார்.

எனவே கடவுளின் கண்காணிப்பில் கடமை நடை பெறுவதாகவே நாம் கொள்ள வேண்டும். இதனால் கடமையும், உழைப்பும் புதிய பரிமாணம் அடைவதோடு புனிதமும் பெறுகிறது. கடமையாற்றுபவரின் உள்ளம் படிப்படியாக உயர்ந்து தூய்மையடைகிறது. எனவே உள்ளத்தில் அமைதி ஏற்பட்டு தொடர்ந்து கடமை ஆற்றுவதற்கான ஊக்கமும், உற்சாகமும் தோன்றுகின்றன.

உழைப்பவர்கள் அனைவரும் இறைவனுக்கு அர்ப்பணமாக தம் கடமைகளை ஆற்றினால் உழைப்பில் நேர்மையும், உண்மையும் மிளிரும். தனக்கும், பிறருக்கும், சமூகத்திற்கும், தேசத்திற்கும் கேடு விளைவிக்கத்தக்க செயல்கள் நடைபெற மாட்டா அதனால் மேற்குறிப்பிட்ட இயற்கைச் சமநிலையைக் குலைக்கும் நடவடிக்கைகள் இருக்க மாட்டா.

கலிகாலத்தில் எம்மைச் சூழ்ந்துள்ள பாதக நிலைகளுக்கும் ஆரவாரத்திற்கும் மத்தியில் அவற்றினால் பாதிப்படையாது இயல்பாக வாழ வேண்டுமானால் கடும் தவம் எதுவும் செய்ய வேண்டியதில்லை, விரதம் இருந்து உடலைக் கெடுக்கவும் வேண்டியதில்லை ஆண்டவனின் நாமத்தை ஆவலுடன் உச்சரித்து அவன் புகழையே பேசி பாடிக்கொண்டிருப்பது தான் அந்தவழி

ஆண்டவன் திருநாமத்தை வாய்வார உச்சரிக்க வேண்டும். அதன் தூய ஒலியலைகள் காதுகள் மூலமாகச் சென்று நேரே உள்ளத்தில் எதிரொலிக்க வேண்டும். சில நாள் பயிற்சியின் மூலம் இந்தச் சாதனையில் நிச்சயம் வெற்றியடையலாம் இதற்கு எவ்விதமான நியமமோ, சாஸ்திர சம்பிரதாயங்களோ விதி முறைகளோ கடைப்பிடிக்க வேண்டியதில்லை நேரம் கிடைத்தபோதெல்லாம் ஆண்டவன் நாமத்தைச் சொல்வோம். கடமையை அவனுக்காக வென்று செய்வோம் கர்ம யோகிகளாய் மாறுவோம். அப்போது எந்த ஆரவாரத்தின் மத்தியிலும் உள்ளத்தில் அமைதி காணலாம்.

4ம் பக்கத் தொடர்ச்சி

### பிம்பிராச மன்னன் ............

சொல்லுமையா? வெட்டிக்கொலை செய்ய வேண்டாமையா? இந்த இழிய செயலை விட்டொழியும் உமக்கு மிக்கமேன்மை உண்டாகும் ஐயா? ஆயிரம பாவங்கள் செய்ததெல்லாம் ஏழை ஆட்டின் தலையோடு போய்விடுமோ? நீ செய்யும் நன்மையும் தீச்செயலும் முற்றி முதிர்ந்து பிறவி தோறும் தொடரும் எண்ணம் சொல் செயல் மூன்றினாலும் நீர் செய்யும் நீதி, அநீதியான செயல்கள் எல்லாம் உம்மை விட்டு ஒரு நாளும் செல்லாது. கொன்று பழிதேட வேண்டாம் ஐயா இனிக் கொல்லா விரதம் மேற்கொள்ளுமையா பலவகைப்பட்ட தானியங்களும் உண்டு. நல்ல பழங்களும், காய்களும் கீரை வகைகளும் உண்டு பூமியில் வானத்து மழைநீர் உண்டு இந்த உயிர் வாழ்விற்கு இவை போதாதா? இவைகள் உணவு இல்லையா? ஊண்ணுண்ணும் தீச்செயலை விட்டு நிலத்தில் உள்ளதை யாவரும் உண்டு வாழ்ந்தால், மானும் புலியும் ஒரு குளத்தில் நீர் குடிப்பதைக் காணலாம். எனவே தீவினை செய்ய வேண்டாம. ஏழை ஆடுகளின் உயிரை வாங்க வேண்டாம். இந்தப் பூமிதனை நரகலோகமாக்கிடும் புத்தி கெட்ட செயலை விட்டொழியும் ஐயா!

கருணைக் கடலான புத்தரின் உபதேசம் கேட்டு மனம் மாறிய தீக்ஷிதர் வாளை விட்டெறிந்தார். யாகத்தீயினை அழித்தார் மோட்சம் இவை தருமோ? என ஞானமூர்த்தியாம் புத்தரின் பாதம் பணிந்து நின்றார்.

'செய்த பிழையெல்லாம் பொறுத்தருள்வீர்.' என மன்னன் பிம்பிராசனும் புத்தர் பாதம் பணிந்து ஐயனே! இனிமேல் இந்த நாட்டில் கொலைகள் செய்யாது தவிர்க்கும் ஆணையை பிறப்பிப்பேன் என்று மனமுருகக் கூறினார். விடிந்ததும் அரசன் பிம்பிராசன்,

யாகசாலையில் தீ வளர்த்து உயிர்க்கொலை புரிவது பழியும் பாவமும் ஆகும். எனவே ஊனை உண்ணும் உயிர்க்கொலை புரியும் தீச்செயல் இன்றிலிருந்து இந்த நாட்டில் செய்யக்கூடாத செயலாகப் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது. என் அரச ஆணையென நாடு முழுவதும் ஆணையிட்டார். இந்த அரச ஆணை சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் நிலைத்திருக்கும் என மந்திர ஓலை எழுதுபவர்கள் சாசனம் எழுதிவைத்தனர். பாறைகளிலும் வழிப்பாதை தூண்களிலும் ஆறுகள், குளங்கள் உள்ள படித்துறைகளிலும் இந்த ஆணை அழியாதபடி எழுதிவைத்தனர்.

அன்று முதல் மாதம் மும்மாரி மழை பெய்தது. நாடு செழித்து நகரம் சிறந்தது. மக்களிடையே உண்மையறிவு வளர்ந்து புத்தரின் உரையை பொன்னுரையாக மதித்து மனதில் போற்றி வாழ்ந்தனர்.

3ம் பக்கத் தொடர்ச்சி

### மனிதனை......

### உணவில் உப்பும் காரமும்

உப்பு மேலதிகமான உணவு இரத்த அழுத்தத்தை உருவாக்கும். மேலதிகமான காரம் மிக்க உணவு அரக்கர்களின் சுபாவங்களைக் கொடுக்கும். தீய குணங்களின் மிக்க கேடான மாத்சர்யத்தை (பொறாமையை) அது தோற்றுவிக்கும்.

பிறர் செய்வதை கண்டனம் செய்யும் நீங்கள் அதே தவறைச் செய்யக்கூடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் கேட்கலாம்



கேள்வி:

இறந்தவர்களை எழுப்புதல் வரையிலான மகத்துவ அற்புதங்களை நீங்கள் செய்துள்ளதாக நம்பப்படுகின்றன. மேலும் தூர இடங்களில் நீரில் மூழ்கியவர்களையும் விபத்தில் சிக்கியவர்களையும் நீங்கள் காப்பற்றியதாக நம்பப்படுகிறது தூரத்தில் இருந்தே நீங்கள் அறுவை வைத்தியம் செய்துள்ளதாக வைத்திய நிபுணர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வளவற்றையும் நீங்கள் எவ்வாறு சமாளிக்கிறீகள் எனச் சொல்ல முடியுமா?

பாபா:

எனது சங்கல்பத்தின் படியே அதாவது தெய்வத்துவ விருப்பத்தின் பேரிலும் வல்லமையின் பேரிலுமே இவை நடைபெறுகிறது. நான் அவதாரமாக இருக்கையில் எனது விருப்பம் எனது திட்டம் என்பவற்றுக்கு இணங்க இந்த வல்லமைகள் உடன் பிறந்ததாய் உளளடக்கமாய் முழுமையாய் இயல்பாய் இருககின்றன. எனக்கு மந்திரமும் தேவையில்லை சாதனை பயிற்சியும் தேவையில்லை எனது அதிகார நிலைககு இந்த அறபுதங்கள் எல்லாம் இயல்பாக அமைந்தவையே எல்லா நேரங்களிலும் எல்லா இடங்களிலும் எங்கும் எப்பொருளிலும் தொடர்புடையதாய் இருக்கின்ற எனது தெய்வத்துவ உண்மை இயல்பினது வெளிப்பாடாய் அல்லது கூறுதிப்பாடாய் அமைவதே எனது ஆற்றல்கள் இந்த அற்புதங்கள் எல்லாம் எல்லையற்ற ஆற்றல்களை உடைய கடவுளையே சார்ந்தன.

உங்களது கேள்வியின் பிரதான விடயத்துக்கு வருவோம் நோய்களைக் குணமாக்கும் விடயத்தில் இருவழி அம்சமுண்டு. மக்கள் ஆன்மீக அருள் பெறும் நிலையில் இருப்பார்களாயின் அவர்களுடைய நோயைக் குணப்படுத்த, அவர்களைக் காப்பாற்ற, ஏன் இறந்து போனாலும் அவர்களை மீளவும் எழுப்ப என்னால் முடியும். மின்னோட்டத்தின் நேர், மறை ஒட்டங்களைப் போன்றது இது சுகப்படுத்தும் எனது வல்லமையை நேர் ஓட்டத்திற்கு ஒப்பிடலாம். என்னை நோக்கிய உங்களது பக்தி மறை மின்னோட்டமாகும். இந்த இரண்டும் ஒன்றாக இணைந்தவுடன் அந்த பக்தியே அந்த குணமாக்கும் அற்புதத்தைச் செய்கிறது.

ஆரோக்கியத்திற்கும் ஆரோக்கியம் இன்மைக்கும் பொறுப்பாக இருப்பது மனிதனுடைய மனமே இரண்டிற்கும் காரணமாய் இருப்பது அல்லது உந்துசக்தியாயிருப்பது மனிதனேதான. நோய் சுனமாக வேண்டுமெனில் அதற்குரிய அவசியமான நம்பிக்கை, அவனது மனதிலே உண்டு பண்ணப்பட வேண்டும். அவனைக் குணப்படுத்த, அவனுக்கு வேண்டிய நம்பிக்கை, உறுதி வல்லமைகளை அவனுக்கு அளிப்பதே நான் செய்யும் வேலை என்மீது பக்தனுடைய நம்பிக்கையின் செறிவுக்கு ஏற்ப நான் காட்டும் அளவு கடந்த அன்பே விரும்பிய பெறுபேற்றினை அளிக்கிறது.

கேள்வி:

வரட்சி வரும்போது மழையையும் பஞ்சம் வரும் போது உணவையும் தனது சங்கல்ப்ப சக்தியினால் பாபா வரவழைத்து ஏன் மக்களது துன்பத்தையும் போக்காது இருக்கிறார் என்று பாபாவினது விமர்சகர்கள் கேட்கிறார்கள். இயற்கை விசைகளைக் கட்டுப்படுத்தி புவிநடுக்கம், வெள்ளப்பெருக்கு, வரட்சி, பஞ்சம் மற்றும் தொற்று வியாதி போன்றவற்றிலிருந்து மக்களைக் காப்பாற்ற ஒரு அவதாரத்தால் முடியாதா சுவாமிஜி?

பாபா:

மனிதனுக்குள்ளே இருக்கிற தெய்வத்துவத்தை மலரச்செய்து அதன் மூலமாக அவன் மேற் சொல்லப்பட்ட பேராபத்துக்களிலிருந்து மீளும் வழிகளைக் காட்டிக் கொடுக்கும் பணியையே நான் இப்போது செய்து கொண்டிருக்கிறேன். என்று சொல்லலாம். இரண்டு முறைகளில் ஒரு அவதாரம் மக்களைக் காப்பாற்றலாம். ஒன்று குறுங்கால உடனடித்தீர்வு மற்றது நெடுங்கால நிரந்தர தீர்வு

உடனடித்தீர்வு எல்லாம் இயற்கையின் அடிப்படை இயல்புக்கும் காரண காரிய கர்மா விதிக்கும் மாறாக அமையும் இந்த விதியால் ஆளப்பட்டு ஆசைகளும் அகங்காரங்களும் அடங்கிய உலகியல வாழ்விலே தான் அனேக மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தமது வினைகளுக்கேற்ப பயன்களைப் பெறுகிறார்கள். அவர்களுடைய வளர்ச்சியையும் தேய்வையும் கர்ம விதியே நிர்ணயிக்கிறது. பிரச்சனைகளை உடனடியாகத் தீர்க்கும்படி அவதாரம் தலையீடு செய்தால் அது மக்களுடைய செயல் விருத்தி மற்றும் பரிணாம வளர்ச்சியையும் நிறுத்தி விடும் இயற்கையின் விதிகளை மீறுவதால் இந்தத் தீர்வு ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்று விலக்கப்பட வேண்டும்.

கூடிய பயனுடைய மற்றத்தீர்வு ஒரு நீண்ட காலத்தீர்வாகும. ஆத்மீக விதிகளை மக்களே தெரிந்து விளங்கும் படியான அளவுக்கு மக்கள் ஒரு உயரிய தன் உணர்வு (ஞான) நிலைக்கு ஏறும்படி மக்களுக்கு அவதாரம் வழிகாட்டுவதாகும். மக்கள் ஆத்மீக உண்மைகளை அறிவதால் அவர்கள் ஒரு சத்திய தர்ம வாழ்க்கைப் பக்கமாகத்திருப்பி நல்ல முறையான வாழ்க்கையை அமைக்கத் தொடர்ச்சியாகப் பாடுபடுவார்கள் அப்போது இந்த நல்வாழ்வானது அவர்களைத் திரும்பவும் இயற்கையோடும் கர்மாவின் காரண - காரிய விதியோடும் தொடர்பு படுத்து அப்போது இன்று காரண - காரிய சுற்றுக்குப் பலியாகும் இவர்கள் அதனைக் கடந்து இயற்கை விசைகளைக் கட்டுப்படுத்தி நீங்கள் கூறும் பேராபத்துக்களைத் தவிர்க்கும வல்லமை பெறுவார்கள்.

கேள்வி:

தாமே தம்முடைய தலை விதியை நிர்ணயிக்கக் கூடிய கடவுளைப் போன்ற தன்னுணர்வு நிலைக்கு மனித இனத்தை நீங்கள் உயர்த்திக் கொண்டு இருக்கிறீர்கள் என்பதா அர்த்தம்?

பாபா:

சரியாகச் சொன்னீர் எனது சங்கல்ப்ப சக்திக்கு அவர்கள் பங்குதாரர்களாக அமைவார்கள். அவர்களுக்கூடாக நான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது அவாகளுக்குள்ளே இருக்கும் தெய்வத்தை எழுப்ப வேண்டியிருக்கிறது. அத்துடன் இயற்கை விதிகளையும் விசைகளையும் வெல்லக்கூடிய உயர்ந்த உண்மைத்துவ நிலைக்கு அவர்களை வளர்க்க வேண்டி இருக்கிறது. அவர்கள் தற்சமயம் இருக்கின்ற அறிவு நிலையில (தன்னுணர்வு) வைத்துக கொண்டு அவர்களுடைய துன்பத்தை உடனடியாக மாற்றுவேனென்றால் அவர்கள் எல்லாவற்றையும் குழப்பிக் கொண்டு ஒருவருக்கு ஒருவர் பகைவராய் திரும்பவும் அதே குழப்ப நிலையையே உலகில் உருவாக்குவார்கள்.

பிளிற்ஸ் (BLITZ) பத்திரிகை ஆசிரியர் திரு R. K கரன்ஜியாவுக்கும், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவுக்கும் இடையில் நடந்த சம்பாஷணை இது போல நீங்களும் கேளிகள் கேட்கலாம். அவர் பதில் தருவார்.

வேதனையும் துன்பமும் பிரபஞ்ச நாடகத்தில் தவிர்க்க முடியாத அம்சங்கள் கடவுள் அல்ல இந்த பேரிடிகளைத் தருவிப்பது மனிதனே தனது தீச்செயலுக்குத் தண்டனையாக இதனை வரவழைக்கிறான் தவறான பாதையைக் கைவிட்டுச்சரியான பாதைக்கு வரும்படியாக மனிதனுக்கு ஒரு திருத்தும் தண்டனையாக இவை அமைகின்றன. சரியான பாதைக்கு வந்து ஞானமாயும் ஆனந்தமாயும் என்று இருத்தலான சச்சிதானந்த நிலையெனும் கடவுள் நிலையை அனுபவிக்க வேண்டும்.

எனவே, இறுதியாக நீங்கள் கூறும் பேராபத்துக்களை எல்லாம் என்னால் நிறுத்த முடியும் பெரிய அவசியம் ஏற்படும்போது நிறுத்தியும் வருகிறேன். ஆனால் அனாவசியமாக நிறுத்த முனைந்தால் கர்ம விதியில் அமைக்கப்பட்ட படைப்பு நாடகம் மீன்று விடும். இத்துன்பமெல்லாம் நிகழ்வதற்கான காரணம் கடவுள் மனிதனை என்னவாக்கி இருக்கிறான். என்பதல்ல ஆனால் உண்மையில் மனிதன் மனிதனை என்னவாக்கியிருககிறான் என்பதே- இதனை நினைவு படுத்திக் கொள்ளுங்கள் ஆதலலால் மனிதனின் அகங்காரத்தை அழித்து அவனது தன்மையை மாற்றி அதற்குப்பதிலாக கர்மவிதியைக் கடக்கின்ற பெருந் தன்னுணர்வைப் புகுத்தி புதிய மனிதனாக அவனை மாற்ற வேண்டும் அப்போது கர்மவிதியைக் கடந்து தானே தனது விதியை நிர்ணயிக்கின்ற வல்லமை பெறுவான்

இப்பத்திரிகை மானிப்பாய் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தினால் கே. கே. எஸ். வீதி, பூந நிமரத்தடி, ஸ்ரீ சாயி அச்சகத்தில் அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. 13-08-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org